# பூவரசு

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று




Poovarasu

ஆடி - ஆவணி 99

914/09

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
பொள்ளாச்சி நசன்



# வாழ்த்துகிறோம்



பரதநாட்டிய அரங்கேற்றம்
செல்வி கிரிசாந்தி பாலசுப்பிரமணி

21.08.1999

ஆடற்கலைதனில் ஆற்றல் மிகுந்து நீ
அற்புதமாய் வளர்க! -தமிழ்
பாடல் இனிமையைப் பாவங்களாக்கியே
பாரினில் சீர்பெறுக!
தேடற்கரிய நற் செல்வமெல்லாம் எங்கள்
சித்திரமே பெறுக- புவி
நாடும் பரதக் கலையினிலே பெரும்
நாயகி ஆகிடுக!

-பூவரசு கலை இலக்கியப் பேரவை சார்பில்
இந்துமகேஷ்.


உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம்சொந்தம்

இனிய தமிழ் ஏடு

# பூவரசு

இரு திங்கள் ஒன்று

இதழ்: 58
ஆடி- ஆவணி 1999.
Juli – August ´99

Poovarasu
Tamilische Kultur Magazin



முகவரி:

**Poovarasu**
**Sinniah Maheswaran**
**Postfach: 10 34 01**
**28034 Bremen**
**Germany**


இந்தமலரின் இதழ்கள்....

க.ஸ்ரீதாஸ்
ரவி செல்லத்துரை
வீ.ஆர்.வரதராஜா
த.சு.மணியம்
இ.சம்பந்தன்
கோசல்யா சொர்ணலிங்கம்
ஏ.ஜே.ஞானேந்திரன்
ஜெகதீஸ்வரி இராஜரட்ணம்
எழிலன்
அ.கணேசலிங்கம்
ப.இராஜகாந்தன்
விஜயா அமலேந்திரன்
மணிபல்லவன்

**இளந்தளிர்கள்:**

கஜிநாத் தவம்
ஆன் வினோலினி நடேசன்
ஆனந்த் குலதாசன்
சாங்கவி

# அன்போடு பூவரசுக்கு!

சென்னை
18.08.99

அன்பு நண்பர் அவர்களுக்கு!
வணக்கம்.
பூவரசு பங்குனி-சித்திரை இதழ் வந்து சேர்ந்தது படித்து மகிழ்ந்தேன்.
சிறு இடைவேளைக்குப் பிறகு இதழ் வந்தபோதிலும் வழக்கமான தரத்துடன் அது அமைந்துள்ளது.
உறவுகள் மேம்பட... எனும் கருத்துக்கள் மனிதவாழ்வில் நலமும் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவுவதற்கு உதவக்கூடிய நல்ல ஆலோசனைகள் ஆகும்.
சத்தியத்தின் சுவடுகள் சிந்திக்கத் தூண்டும் நல்ல அனுபவப் பதிவுகள்.
நோபல் பரிசு அருமையான கதை.
இளம் பிறை எம்.ஏ.ரஹ்மான் அவர்களுடனான நேர்காணல் பாராட்டுதலுக்கு உரியது.
பலதும் பத்தும் ரசமான தகவல் குறிப்புக்களாக விளங்குகிறது.
பூவரசு எட்டாவது ஆண்டை நிறைவுசெய்து ஒன்பதாம் ஆண்டில் அடி எடுத்து வைத்திருப்பது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரிய விஷயம்.
அதன் இலட்சியப் பயணம் வெற்றிகரமாக முன்னேற வாழ்த்துகிறேன்.
நான் நலம்.
நீங்களும் நண்பர்களும் நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகின்றேன்.
இந்தியாவில் இப்போது தேர்தல் பரபரப்பு காலம்.
தமிழ் நாட்டிலும் அரசியல் கட்சிகளின் கூட்டு சேரல்களும் பிரசாரங்களும் மும்முரமாக இருக்கின்றன.
பத்திரிகைகள், ரேடியோ, டிவி, எல்லாவற்றிலும் அரசியல் கட்சிகளின் தேர்தல்கால செயல்பாடுகள் குறித்த செய்திகள்தான் முக்கியத்துவம் பெறுகின்றன.

அன்பு
**வல்லிக்கண்ணன்.**

---

நான் நலம். உன் நலம் எப்படி?
உன் வரவு காணாது பலவாறு யோசித்தேன்.
பலதடவை தொடர்புகொண்டபோது உ
தொலைபேசி அழைப்பும் துண்டித்திருந்தது.
எல்லா இதழ்களுக்கும் நடந்த கதிதான் உனக்
நடந்து விட்டதோ என்றுகூட கருதினேன்.
ஆனால் இன்று உன்னைக் கண்ட மனமகிழ்
உடன் இதை எழுதுகின்றேன்.
சஞ்சிகைவெளியீட்டின் சிக்கல்கள் ந
அறிவேன்.
ஆனால் தரமான இதழ் மறைவதா?
உன் நிழலில் ஆறியவர்கள் எத்தனைபேர்...
தூற்றியவர்கள் எத்தனைபேர்...
துவண்டுவிடாதே! உனக்கு ஆயிரக்கணக்க
கிளைகள் உண்டு.
ஆனால் ஆணிவேரான பூவரசே நீ வாடுவ
வேண்டாம்.
உன் பணி தொடரவேண்டும்.
அதற்கு நான் செய்ய இயன்ற
உதவிசெய்வேன்.
மீண்டும் சந்திப்போம்

அன்பே
க.ஸ்ரீதா
(நெதர்ல



உலகத்தின் ஞானம் எல்லாம்
இரண்டே வாக்கியங்களில் அடங்குகின்றன

1. பொறுத்திருங்கள்
2. நம்பிக்கையுடன் இருங்கள்.

-அலெக்ஸாண்டர் டூமாஸ்.

# எழுத மறந்த எழுத்துக்கள்.

-இந்துமகேஷ்.

எப்போதோ எழுத வேண்டும் என்று நினைத்தவைகளை
எழுத மறந்த எழுத்துக்கள் என்று தலைப்பிட்டு இப்போது எழுதுவது சரியான காரியம்தானா?
எதை எழுதவேண்டும் என்று நான் எண்ணியிருந்தேனோ அவைகளை முற்றிலுமாய் எழுதி முடித்துவிட என்னால் இயலுமா?
எனக்குத்தெரியவில்லை.
என்றாலும் இனியும் எழுதாதிருக்க முடியாது என்பதால் எழுதுகிறேன்.
ஆனால் இதில் முக்கியமான ஒரு விடயம்~
எவர் மனதையும் நோகடிப்பதற்காக இதை நான் எழுதவில்லை!
என் மன உணர்வுகளை உங்களிடம் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்கின்ற
எனது விருப்பத்தின் வெளிப்பாடாக இதை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.
உங்கள் கருத்துக்களும் எனக்கு முக்கியம்.

□

மாறும் காலத்தோடு மாறிச்செல்லும் மனிதர்களாய் மாறிவிட்ட நாம்.
திட்டமிடல் என்பது அர்த்தமற்றதாகிவிட்டது.
இன்றையப் பொழுது விடியும்போது இன்றைய தேவைக்கான சிந்தனைகள்.
நாளையைப்பற்றிய அக்கறை நலிந்துபோய்விட்டது.
எதிர்காலம் என்பது ஒரு கேள்விக்குறியாகி.....
வாழ்க்கையில் அன்றாடத் தேவைகளைமட்டுமே கவனித்தால் போதும் என்கின்ற
மனப்பான்மையில் பலர்.
ஆனாலும்~
ஒருசிலர் சிந்திக்கிறார்கள்~
இன்றைய நிலையைக்கடந்து நாளையப் பொழுதுகளுக்காகவும்!
அடுத்த தலைமுறையொன்று நமக்குப் பின்னால் வருகிறதே...
அதற்கு ஏதாவது செய்துவைக்க வேண்டாமா என்ற ஆதங்கத்தோடு,
முடிந்ததைச் செய்வோம் என்று முனைகிறார்கள்.
ஆனால்~
எண்ணியபடி எல்லாம் நடந்துவிடுவதில்லை.

□

புலம்பெயர்ந்தோர் இலக்கியம்!
~ புலம்பெயர்ந்து வாழும் தமிழ் இலக்கியவாதிகள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் தமது
படைப்புக்களை அடையாளப்படுத்திக்கொள்ள இட்டுக்கொண்ட பெயர் அது.
புலம்பெயர்ந்தோர் இலக்கியமா?
~அப்படியொன்று இருக்கிறதா என்ன?
இப்படிக் கேட்பவர்கள் இப்போதும் இருக்கிறார்கள்.
புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் இலக்கிய முயற்சிகளை அடையாளமிட்டுக்கொள்ள ஒரு
பெயர் தேவையானபோது ~புலம்பெயர்ந்தோர் இலக்கியம்~ என்று சொல்லிக் கொண்டார்கள்.
ஐரோப்பாவில் தங்கள் வாழ்வை அடகுவைத்த வேளையில்தான் இது ஆரம்பிக்கப்பட்டது.
என்றாலும் இன்று உலகமெங்கும் பரந்துவிட்ட தமிழர்களின் ஒட்டுமொத்தமான இலக்கிய
முயற்சிகளுக்கு இந்தப் பெயரே அடையாளமாகக் கொள்ளப்படுகிறது.
ஆனால்~
இது சரியான அடையாளம்தானா?
எதற்காகக் இலக்கியத்துறையில் இப்படியொரு பிரிவு?



புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்ற ஒரு வட்டம்போட்டு நீங்கள் உங்கள் கலை இலக்கிய
முயற்சிகளைத் தொடர்ந்துகொண்டிருந்தால் ஏனைய படைப்பாளர்களிலிருந்து தமிழீழத் தாயக,
தமிழக படைப்பாளர்களிலிருந்து நீங்கள் தனித்துப் போய்விட்டதாக அர்த்தப்படாதா?
~இப்படியொரு கேள்வி இப்போது என்னுள் முளைத்திருக்கிறது.

புலம்பெயர்ந்தோர் இலக்கியம் வளர்கிறது~ வளர்க்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று கடந்த
இதழில் எழுதிவிட்டு இந்த இதழில் இப்படியொரு கேள்வியைத்தொடுப்பது எனக்கே
ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

ஆனால் என்னசெய்வது?
மாறும் சூழ்நிலையோடு மாறும் மனிதர்களோடு சில சந்தர்ப்பங்களில் கைகோர்த்துக் கொள்ள
வேண்டியிருக்கிறதே!
அதனாலும் இப்படி ஆகியிருக்கலாம்.
ஆனாலும் என் வரையில் அவர்களோடு நான் ஒத்துப்போவது போல் தோன்றுவது
புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்ற அடையாளம் வேண்டவே வேண்டாம் என்ற பாவனையில்
அல்ல.
இது புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்ற எல்லையைக்கடந்து உலகத்தமிழ் இலக்கியமாக
வேண்டும் என்ற ஆவலினால்தான்.

□

புலம்பெயர் மண்ணில் நமது படைப்பாளர்களில்~
பலர் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்~அதற்குக் காரணங்கள் பல.
பலர் எழுதாமலிருக்கிறார்கள்~அதற்கும் காரணங்கள் பல.
எழுதாதவர்கள் சொல்லும் காரணங்கள்பற்றி யாரும் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.
அதற்கு அவசியமும் இல்லைதான்.
ஆனால் எழுதிக்கொண்டிருப்பவர்கள் பலசந்தர்ப்பங்களில் கேட்கப்படுகிறார்கள்.
ஏன் எழுதுகிறீர்கள்?
இந்தக் கேள்வி பலரிடமிருந்து பலமாதிரியான தோரணையில் வரும்.
கேள்விக்குப் பதிலளிக்க படைப்பாளன் சரியான காரணத்துடன் தயாராக இருக்கவேண்டும்.

எனக்காக. என் ஆத்மதிருப்திக்காக.
எனது அறிவை வளர்த்துக்கொள்வதற்காக.
எனது மொழியின்மீது எனக்கிருக்கும் பற்றுதலால்..
எனது சமுதாயத்துக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காக.
என் உணர்வுகளை வெளிப்படுத்தவேண்டும் என்பதற்காக.
எழுதாமலிருக்க என்னால் முடியாது என்பதால்.
~இப்படி ஏதாவது ஒரு காரணத்தை படைப்பாளன் முன்வைப்பான்.
ஆனால் நானறிந்தவரையில்

(தொடர்ச்சி 46ம்பக்கம்)

## மறுமணம்

சரித்திரங்கள் படைக்கும்
சமுதாயச் சந்தையிலே
சவால்களைச் சமாளிக்கும்
சாமானியர்களின் மத்தியிலே
மனங்களை நேசிக்கும்
மனிதர்களின் மலர்ச்சியிலே
மறுமணம் என்பதும்
மறுசீலிக்கப்படவேண்டும்

ஆண்கள்
மறுமணம் புதுவிதி
பெண்களுக்கு
மறுமணம் தலைவிதியாம்
சுகம் தரும்
சுகந்தமாம் பெண்ணினம்
பெண்ணை
பேணும் விதம் மட்டும்
எவ்விதம்?
அம்மன் என்றும் மாதா என்றும்
சித்திரிக்கும்
மானிடரே
பெண்ணின் நிலைதனை
சீர்படுத்தி
மாறும் இவ் உலகமதில் நல்
மாற்றம்
கொண்டு மாறுங்கள்
வெள்ளைச் சேலைதனையுடுத்தி
வேதனைகளை ரணமாக்கி
பட்டங்களும் சூட்டி
மட்டம் தட்டி பார்க்கும்
மடமைத் தனங்களை
மண்ணோடு புதைத்துவிட்டு
மங்கையரின் மறுவாழ்வுக்கு
வழிகோலுங்கள்
ஒரு புது யுகத்தில்
புதியவர்களாய் வலம்வந்து
இரண்டாயிரமாண்டில்
இனியவர்களாய் நிகழ்வோம்

-க.ஸ்ரீதாஸ்.
(நெதர்லாந்து)

## பயணங்கள்

பயணங்கள் பயணங்கள்
வாழ்க்கைப் பயணங்கள்
குழந்தைப் பருவத்தில்
தவழ்ந்து திரிந்த பயணங்கள்
மழலை மொழிபேசி
மகிழ்வித்த பயணங்கள்
கல்விச் சாலை சென்று
கல்விகற்ற பயணங்கள்
பட்டம் பெற்ற பின்பு
வேலைதேடிப் பயணங்கள்
காளைப் பருவத்திலே
காதல் பயணங்கள்
திருமண பந்தத்தால்
குடும்பப் பயணங்கள்
குடும்பப் பந்தத்தால்
குழந்தையுடன் பயணங்கள்
நாட்டின் பிரச்சினையால்
நாடோடிப் பயணங்கள்
நாடோடிப் பயணத்தால்
பல நாட்டுப்பயணங்கள்
பலநாட்டுப் பயணத்தால்
சொந்தம் இழந்த பயணங்கள்
தொடர்ந்த பயணங்கள்
எத்தனையோ எத்தனையோ
தொடரும் பயணங்கள் இன்னும்
எத்தனையோ எத்தனையோ
பயணங்கள் பயணங்கள் வாழ்வின்
இறுதி வரை பயணங்கள்
தெரியாமல் வந்தது
பிறப்பின் பயணங்கள்
தெரியாமல் போவது
இறப்பின் பயணங்கள்

-ரவி செல்லத்துரை
(பாசல், சுவிஸ்)



## அன்புள்ள தம்பிக்கு

*அதிக நாட்களாக உன்னிடமிருந்து கடிதம் எதுவும் வரவில்லை. அதனால் நானும் கடிதம் எழுதவில்லை. புதினங்களை எப்படியும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற உன் துடிப்பு எங்கேபோயிற்று.*

*இருப்பினும் இந்தியத் தேர்தல் பற்றிய சில விபரங்களை இந்தக் கடிதத்தில் தெரிவிக்க இருக்கின்றேன். இதுபற்றி நீ சகல விபரங்களையும் பத்திரிகைகளிலும் வாசித்திருப்பாய். ஆனால் பத்திரிகையில் வெளிவராத சில தகவல்களை இங்கே உன்னுடன் பரிமாறிக் கொள்ள விரும்புகின்றேன்.*
*இந்தியாவில் பாரதீய ஜனதாக்கட்சி கூட்டணி ஆட்சி 13 மாதங்களின் பின் நம்பிக்கைத் தீர்மானம் ஒரு வாக்கினால் தோல்வியுற்றதையடுத்து பாராளுமன்றத் தேர்தலை நடாத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.*
*இதில் இன்னொரு வேடிக்க என்னவென்றால் பாரதீய ஜனதாக் கூட்டணி அரசு தோல்வியடைந்ததையடுத்து மாற்று அரசு அமைக்க இந்திரா காங்கிரஸ்கட்சி உட்பட எந்தக் கட்சியாலும் முடியாமல் போனதேயாகும்.*

*பாரதீய ஜனதாக்கட்சி ஒரு மதவாதக் கட்சியென பலரும் கூப்பாடு போடுகின்றனர். சிறுபான்மை முஸ்லிம்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே இந்தக் கூப்பாடு. ஆனால் இஸ்லாமிய நாடுகளில் இவ்வாறானதொரு நிலை ஏற்படுமா என்றால் நிச்சயமாக இல்லையென்றுதான் சொல்லவேண்டும். உண்மையச்சொல்லும்போது நானும் ஒரு மதவாதி என்று சொல்லிவிடாதே!*
*மதத்திற்கும் இந்தக் கூப்பாடுகளுக்கும எவ்விதத் தொடர்பும் இல்லை. சில உண்மைகளை உள் வாங்கிக் கொள்ளும் தன்மை அற்றுப் போனதால் ஏற்பட்ட விளைவு.*
*சிறிலங்காவில் பௌத்தம் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய மதம்.*
*78 சதவீதமானோர் அம்மதத்தைத் தழுவியுள்ளனர். அதனை அரச மதமாக சிறிலங்கா அரசியலமைப்பில் சேர்த்துக்கொண்டுள்ளது.*

**இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சி கூட்டணி வெற்றிபெறவேண்டும்**

எங்கே அரசமரத்தைக் கண்டாலும் அங்கே புத்தர் சிலையை வைப்பதென்பது சிறிலங்காவில் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.
அதனை மதவாதம் என்று எந்த ஒரு பௌத்தத் தலைவரும் குறிப்பிடவில்லை. மாறாக பௌத்த மதத்திற்கு சிறிலங்கா அரசு கொடுத்துள்ள முக்கியத்துவம் காணாது என்று அவர்கள் குறைப்பட்டுள்ளனர்.
சாதாரணமாக சிறிலங்காவில் எந்த ஒரு அரச அலுவல்கள் நடைபெற்றாலும் பௌத்தமத முறைப்படி பிரித்து ஓதி பௌத்து பிக்குமார் முன் வணக்கம் செலுத்தியே ஆரம்பிக்கபபடும். ஆனால் இந்தியாவில் இவ்வாறானதொரு இந்துமத முறைகள் பின்பற்றப் படுவதில்லை.
அண்மையில் இந்திய மத்திய கல்வி அமைச்சர் மாநில கல்வி அமைச்சர்களின் மகாநாடு ஒன்றினைக் கூட்டினார்.
இம் மகாநாடு சரஸ்வதிப் பாடலுடன் ஆரம்பமாகியது. இதற்குப் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.
எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் இந்துக்கள்.
91 சதவீதமான இந்துக்கள் வாழும் இந்தியாவில் இதற்குக்கூட சுதந்திரம் இல்லையா?என கேட்கத் தோன்றுகின்றது.
உனக்கும் இச்சம்பவம் வியப்பைத் தரலாம். இதுதான் இந்திய ஜனநாயகத்தின் நிலை.
ஆனால் ஆரிய பிராமணர்களின் அட்டகாசங்களைப் பற்றியெல்லாம் பல கதைகள் உண்டு.
ஆனால் அந்தப்பகுதிக்கு நான்போகவில்லை.
அரசின் நிலைப்பாடு அரசியலமைப்பு என்ற வட்டத்திற்குள் நிற்கிறேன்.
இந்து மதத்தைப்பற்றி ஒரு கட்சி கதைத்தால் அந்தக்கட்சியை மதவாதக்கட்சி என்று சொல்லலாமா?
அப்படித்தான் பாரதீய ஜனதாக்கட்சியை அழைக்கின்றார்கள்.
அப்படி அழைப்பவர்களும் இந்துக்கள்தான்.
பாரதீய ஜனதாக் கட்சியைப்பற்றி அரசியல்வாதிகள் கூறும் ஒரு வியாக்கியானத்தைப் பற்றியே இங்கே குறிப்பிட்டேன். அதனால் நானும் அக்கட்சிக்கு வக்காலத்து வாங்குகிறேன் என்று நினைத்துவிடாதே.
இந்தியாவில் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான அரசே ஏற்படவேண்டும் என்பதே இங்கு என் ஆணித்தரமான கருத்து.



இந்தியாவுக்கு மாத்திரமல்ல தமிழீழத் தமிழர்களுக்கும் அதுவே முன்னேற்றத்திற்கான வழிவகுக்கும்.
எம் உறவுகள் தாயகத்தில்படும் நிலையை பாரதீய ஜனதாக் கட்சி கூட்டணித் தலைவர்களில் பலர் கவனத்தில் கொண்டுள்ளனர்.
குறிப்பாக பாதுகாப்பு அமைச்சர் திரு ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தமிழர்களுக்கு விடிவு பிறக்கவேண்டும் என்பதில் ஆர்வமாக இருப்பவர்.
காங்கிரஸ்கட்சி இருக்கும்போது சிறிலங்கா அரசுடன் இணைந்து தமிழர்களுக்கு பெரும் இன்னல்களை விளைவித்தது.
அமைதியாக இருந்த யாழ்ப்பாணத்தை சிறிலங்கா அரசு 95ம் ஆண்டில் ஆக்கிரமித்ததிற்கும் காங்கிரஸ் அரசே காரணம்.
இந்தியப் படைகளை சிறிலங்காப் படையுடன் இணைத்து இரகசியமாக அனுப்பியதாக தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.
யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்திற்கும் தமிழீழவிடுதலைப் புலிகளுக்குமிடையே கடும்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பலாலிக்கு அண்மையில் மாபெரும் இந்திய இராணுவக் கப்பலொன்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.
தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க காங்கிரஸ் அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தது.
எமது விடுதலை வரலாறு நிச்சயம் மறைந்துவிடக்கூடாது.
ஆனால் பாரதீய ஜனதா தலைமையிலான கூட்டணி அரசு எம் மக்களுக்கு நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது.
உதவி செய்யாவிடினும் உபத்திரவம் கொடுக்காமல் இரு என்பதைப் போன்று பாரதீய ஜனதா அரசு எமக்கு ஆறுதலைத் தந்துள்ளது. இவ்வகையில் இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சியே மீண்டும் பதவிக்கு வரவேண்டும் என நாம் விரும்புகின்றோம். இங்கே நாம் என்று நான் குறிப்பிட்டதை விளங்கிக் கொண்டிருப்பாய் என நினைக்கின்றேன்.
இந்தியாவில் தேர்தலுக்கு திகதி குறிப்பிடப்பட்டுவிட்டது.
பாரதீய ஜனாதாக்கட்சி கூட்டணி வெற்றிபெறும் என கருத்துக்கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.
மீண்டும் அடுத்த கடிதத்தில் சந்திப்போம்.

அண்ணன்
**வீ.ஆர்.வரதராஜா.**

# அழியாத கோலங்கள்

சின்ன வயதினிலே
பிட்டுவிற்கும் ஆச்சியிடம்
காசுக்குப் பிட்டுவாங்கி
சும்மா கிடைக்கும் கொஞ்ச
பிட்டுக்காய் காத்திருந்து
நேரம்பிந்தி வருவதினால்
பலமுறைகள் அடிவாங்கிய
என் நண்பனின் வாழ்வு
என்மனதில் என்றும்
அழியாத கோலங்கள்

இருந்த ஒரு
காற்சட்டையையும்
தோய்த்துப் போட்டதனால்
பள்ளிக்கூடம் செல்ல
நேரமாகுதென்று
கையிலே பிடித்து
காற்றிலே உலரவைத்து
பள்ளிக்கூடம் சென்ற
என் நண்பனின் வாழ்வு
என்மனத்தில் என்றும்
அழியாத கோலங்கள்.


ஊரிலே நடக்கும்
பத்துநாள் திருவிழாவில்
சும்மா கிடைக்கும்
சர்க்கரைத் தண்ணிக்காக
வீட்டுக்குப் போக்குக்காட்டி
வேலிப் பொட்டால் வெளியேறி
மூக்குமுட்டக் குடித்து
தன் வயிற்றை நிரப்பிய
என் நண்பனின் வாழ்வு
என்மனதில் என்றும்
அழியாத கோலங்கள்.

குருத்து வடலி
ஓலையினால்
பிளாக்கள் சரிக்கட்டி
கோயிலிலே கொடுக்கும்
சித்திரைக் கஞ்சியை
மூக்கு முட்டச் சாப்பிட்டு
திரும்பவும் பிளாநிரப்பி
வீடுகொண்டு சேர்த்த
என் நண்பனின் வாழ்வு
என்மனதில் என்றும்
அழியாத கோலங்கள்

வேதனைகளில் மீள
விடுதலைக்குப் பாதையிட்ட
இயக்கத்தில்தனைச்சேர்த்து
கிளிநொச்சிச் சமரினிலே
மார்பிலே குண்டுபட்டு
மரணித்தான் என்ற செய்தி
மறக்க நினைக்கிறேன்
மீண்டும் அவன்வாழ்வு
என்மனதில் என்றும்
அழியாத கோலங்கள்.

த. சு. மணியம்
(சால்ஸ்ஹவுஸன்,ஜெர்மனி)





# மானல்ல தேனல்ல மலரல்ல பெண்

-இ. சம்பந்தன்

விழிவீச்சோ மானினம்
மொழிவீச்சோ தேனினம்.
உடல் வீச்சோ மலரினம்
விழி மொழி உடல் மூன்றுமே
அடம்பன் கொடிபோல்
ஒன்று சேர்ந்தால்
வீறுகொண்டெழும்
வெற்றிக்கொடி பறக்கும்
விண்ணதிர மண்ணதிர
மானல்ல தேனல்ல
மலரல்ல பெண்!

கங்கையின் ஊற்றென
அவளிடத்திலே
கருணையின் ஊற்று
சாதலெனும்போதும்
காதலைக்கைவிடாத
காரிகை
உயிருள்ள ஓவியத்தின்
தூரிகை
உலகத்தின் அழகுகளே
அவளிடத்திலே உற்பத்தி

வாளிடம்தோற்காதவனும்
வாள் விழியிடம்
தோற்றுப்போவான்
போர் முனையில்
தோற்காதவனும்
அவளின் கார்கூந்தலின் விரிப்பில்
கட்டுண்டு போவான்

மருட்சிகொள் மாதரை
மிரட்சிகொள் மங்கையரை
மானென்றார் தேனென்றார்
மையலில்
மலரேயென்றார்
புரட்சிகொள் மாதரை
புவிதனில்
என்னவென்பாரோ?
பூவென்பாரோ
புயலென்பாரோ
பாவென்பாரோ
பாசக் கயிறென்பாரோ
மானல்ல தேனல்ல மலரல்ல பெண்

கற்பு நெறி பிறழாத
கண்ணகி நடந்தால்
விண்ணது வழிவிடும்
மண்ணது வழிபடும்
மதுரையை எரித்தவளும்
பெண்மயிலே
மதுரையாய் எரியும் நாடுகளெவை?
கண்ணகிகளங்கே
பிறந்து விட்டார்களா?
வாழ்விடங்கள்அங்கங்கே
சாவிடங்களாகின்றபோது
தென்றலும் புயலாக மாறி
நச்சு மரங்களையெல்லாம்
வேரோடு சாய்த்துவிடுகின்றது
பாரோடு பின்னிய பாவங்களெல்லாம்
கார்மேகங்களாய் கலைந்தோடி
விடுகின்றன.

அவனியினிருளகற்ற
ஆதவனின் ஒளிக் கிரணங்கள்
சமுதாய இருள் கிழிக்க
பெண்களின் அணிவகுப்பு ஊர்வலங்கள்
ஆரவாரமில்லாமலே ஓடுகின்ற
நதிபோல் பெண்ணும்
கரைகளுக்குள்ளேயே
அடங்கிடயங்கியே வாழ்வாள்
அடக்குமுறை கட்டவிழ்ந்தால்
ஆர்ப்பரிக்கும் கடலாவாள்

ஒரு தலைமுறையின்
கூன்விழுந்த முதுகு
உன்னாலே நிமிரட்டும் பெண்ணே
குட்டக் குட்டக் குனிந்தவினம்
முட்ட வருகின்றதேயென்று
முழி பிதுங்குகின்றாரே
யாரால் பெண்ணே?
எப்படி முடிந்தது?
உன்னைப் படைத்தவன்
பிரமனல்ல
புதிய பிரமனவன்
புதிய பிரபஞ்சத்தைப்
படைப்பவனும் பிரம்மாதானே

தர்மத்தை நிலை நிறுத்திவிட
பாரதப் போர்தொடுத்தான்
கண்ணன் அன்று
அதர்மத்தையழித்துவிட
அவனியிலே போர் தொடுத்தான்
மன்னவன் இன்று
அன்றைய போருக்கோ
பெண்ணே மூல வேர்
இன்றைய போருக்கோ
பெண்ணே ஆணிவேர்.

பூவரசு 8வது ஆண்டுநிறைவுப் போட்டியில்
இரண்டாவது பரிசுபெற்ற கவிதை



# குறையை திருத்து
# நிறைவைப் பொருத்து

பிறர் குறைகூறுவதைக்கேட்டு வருத்தப்படுகிறோமே தவிர நாம் செய்தது முற்றிலும் சரிதானா என்று யோசிப்பதும் இல்லை சோதித்துப் பார்ப்பதும் இல்லை.
நம்முடைய கஷ்டங்கள் மற்றவர்களால் விளைவிக்கப்பட்டன என்று அடுத்தவர்களைக் குறைகூறுகிறோம்.
கஷ்டங்களுக்குக் காரணம் நாமேதான் என்பதை ஒருபோதும் உணர்வது இல்லை.
ஹெலினா தீவில் சிறையில் இருக்கும்பொழுது நெப்போலியன் கூறினார்.
*என்னுடைய வீழ்ச்சிக்கு யாரையும் குறைசொல்வதற்கு இல்லை. என்னுடைய மாபெரும் விரோதி நான்தான். என்னுடைய அவலநிலைக்கு நானே காரணம்:*

பெஞ்சமின் பிராங்ளினை எல்லோரும் விரும்புவதற்குக் காரணம் என்னவென்றால் ஒவ்வோர் இரவிலும் அவர் படுக்கைக்குச் செல்லும் முன்பு தன்னைப் பற்றிக் கடுமையான சோதனையை நடத்திக்கொள்வார்.
தான் செய்த குறைகள் தவறுகள் ஆகியவற்றை கண்டுபிடித்தார்.
இப்படி அவர் சோதனை நடத்தியதில் தன்னிடம் பதினைந்து தவறுகள் இருப்பது தெரிய வந்தது.
ஒரு தவறோடு வாரத்தில் ஒருநாள் சரியான போராட்டம் நடத்துவார்.
அதை ஜெயித்துவிட்டதாக அவருக்குத் திருப்தி ஏற்படும்வரை அவர் அடுத்த தவறோடு போராட்டத்தைத் தொடங்கமாட்டார்.
பதினைந்தே வாரத்தில் அவைகளுடன் போராட்டம் நடத்தி வெற்றிபெற்றார்.

வால்ட் லிட்டமன் கூறுகிறார்.
*சிறிய மனிதர்கள் தங்கள்மீது யாரும் சிறுகுறை கூறினாலும்கூட எரிந்து விழுகின்றார்கள். ஆனால் பெரிய மனிதர்களோ பிறருடைய குற்றச் சாட்டுகளிலுள்ள உண்மையை உணர்ந்து தங்களைத் திருத்திக் கொள்கின்றார்கள்.* நம்மை பிறர் குறை கூறும்வரை நாம்காத்திருக்காமல் நம்மையே நாம் முதலில் குறைகூறிக்கொள்வோம். நம்முடைய பலவீனங்களைப்

(தொடர்ச்சி 40ம்பக்கம்)

# மேகலா.



-கோசல்யா சொர்ணலிங்கம்.

உயிரியல் நாளது!
ஆய்வுகூட ஆய்வுநாளது.
"நான் வரவே மாட்டேன்"
— வழக்கமான முரணோடு மேகலா.
"எலியைப் பிளப்பதா?
என்னால் இயலாது!
வயிற்றுப்பாக உரோமத்தைப் போக்கி
பிளந்த பாகத்தை நான்காய் விரித்து
விரிந்ததோலை இழுத்தொரு
மூலைக்காய் அமைத்து
குண்டுசி ஏற்றி குத்திட வைத்து —
அதன்
உள் உறுப்பதை உற்றுப் பார்த்து
குறிப்பது எடுப்பது —
உயிரியல் கற்பது!
இல்லை உயிரைக் கறப்பது
கொடூரம் கொடுமை!!
உயிர்வதை இது இல்லையா?
இதற்காய் எலியைப் பிளப்பதா?
மயக்கும் மருந்தும் ஊசியுமற்று
எலியைப் பிளப்பதா?
நோட்ஸது போதாதோ?
போங்கள் புத்தி ஜீவிகள் போர்க்களம்"
வித்யாவைப் பார்த்தவள் மேகலா
இன்னுமாய் சொன்னாள்
"வித்யா உன் விழி ஏற்று
வித்தையைக் கற்று



விழிப்புணர்வோடு விதைத்திடு
எனக்குள்"
— இதை மேசையிலிருந்தே
மேகலா மொழிந்தாள்.

"மேகலா! எலியும் மனிதனும்
ஒன்றியம் சிலதில்
அதனால் மேகலா, எலியைப்
பிளக்கினம் — நீ
ஏனடி வந்தாய் உயிரியல் படிக்க
உனக்கிது தோதில்லை
உளறாதே சும்மா"
வித்யா சொல்லமுன் முந்தலாய் மேகலா
"வித்யா! நானா வந்தேன்
உன்னித் தள்ளினர்
என்னதானுள்ளது இப்பூமியில்
எங்கள் நினைப்பில்
'ஒரு டாக்டராய்விடு'
நச்சரிப்பு வீட்டில்.
வெட்டும் கொத்தும்
கீறிக் கிழிப்புமது இயலாது
இரசாயனம், பௌதீகம் எனக்காயது
ஐதரசன் ஆகன்
ஆசனிக்கும் பற்றியும் ஆராய்வோம்
ஒலியும் ஒளியும் ஓட்டினால் ஓமோம்
ஒருவேளை இஞ்சினியராவோம் வாடி
வெட்டும் கொத்தும்
கீறும் கிழிப்பும் இயலாது!"

எரிச்சலோடு வித்யா
மேகலாவை நோக்கிட
"வித்யா! இந்த
எலியைப் பிடிப்பது யாராம்
மோகன்தான் மினக்கடுவான் சத்திராதி —
இரக்கமற்ற ஜென்மமது
சரி இன்று எலியது
நாளை நம்மவருக்கு பலி யாரோ?"
மேகலா விளம்பலில் பதிலாகி வித்யா
"நாளை தவளை — ம்..ம்...
அப்புறம் அரிவது ஏதோ"

"சுறா!" ரசிக்கவும் குறிக்கவும்
சுறா சொன்னது வித்யா.
"பட்டியல்கூட, உன்னிடம்தானோ
அனைத்தும்"
"ஆமாம் அந்தப் பட்டியல்
என்னிடமேதான்"
"மொத்தமாய் சொல்லேன்
ஓட்டுமாய் அறிய!" — வித்யா
"வித்யா, ஆம் என்னைப்பிளப்பது
இன்னோர் நாளில்!"
எதிர்பாரா பதிலால் எழுந்த மேகலா
அறைந்து விட்டாள்
வித்யா கன்னத்தில்
அதிர்ச்சியில் வித்யா அறைவைத் தொட
"வெட்டுதல் கொத்தல்
வேண்டாம் என்கிறேன்.
வித்யா! உன்னை வெட்டும்
தவளையா சொல்கிறாய்.
ஒத்திப்போடு உனக்கான பிழைப்பை"
— தன்னில் உரு ஒன்று ஏறியபோல்
உரைத்தாள் மீண்டும்.
"புதுமைப் பெண்ணே புரட்சி என்ன?
எலியிலிருந்து மனிதனைத் தாவுது!"
சொன்னவள் மறுசொற் காத்திரா(து)
அன்று
உயிரியல் ஒதுக்கி
உண்மையாய் ஓடினாள்
கன்னம் வலித்தது!
நேசம் இனித்தது!

ஆய்வுகூட வேளைவந்தது!
எலியும் நாங்களுமாய் அவ்வேளையில்
மேல்வாரியான பார்வையோடு
மேனகா ரீச்சர்
"மேகலா.... எங்கேயவள்? எப்போதும்
இராதவளாய்!"
கேட்டது,கேட்க பதிலாய் வித்யா
"சுகயீனம் லிசரோடு போயினாள்!"
சும்மா சொன்னாள்

"அதென்ன ஆய்வு நேரமெல்லாம்
அவளுக்கு அது!"
அவள் கெட்டித்தனத்தில்
திருப்தியுற்ற ரீச்சர்
தொட்டனர் எலியை வெட்டுதலுக்காக.
கொண்டு வந்த எலியது
குழப்படி போலும்.
கூட்டினைத் திறக்க
எட்டிப்பாய்ந்து ஓட
மோகன் முயற்சியில்
முழுமையாய்த்தோல்வி
"பாவம் அதற்கு பலன் இன்னும்
உள்ளது"
— வித்யா சொன்னது கேட்டு
முறைத்தான் மோகன்
நினைத்து நிமிரமுன், மற்றது களத்தில்
தன்னை எமக்காய் அர்ப்பணிப்போடு
குனிந்தும் நிமிர்ந்தும்
குறிப்பது எடுப்பில் — நாளைய
டாக்டராய் அது தவறின் பி.எஸ்.சி யாய்
பி.எஸ்.சி தப்பின் மருத்துவ தாதிகளாய்
வருங்கால எண்ணத்தில்
வண்ணமாய் மாணவர்

ஆம். ஒரு நாள் போனது,
மறுநாள் வந்தது — மேகலா வந்தனள்
மௌனமாய் இருந்தனர்
மண்டியிட்டபடி வித்யாவை
உலுப்பினாள்
"நோட்ஸை எடு நோகுதா?"
வருடல் ஒன்று!
மேகம் கறுத்து வானம் பொழியமுன் —
அவளே முந்தி நோட்ஸை
எடுப்பில் எடுத்து
எடுத்த நோட்ஸுடன்
விலகியே சென்றாள்
இவள் என்னதான்.

மேகலா என்ன செய்யப் போகிறாள்
திகைப்போடு! வித்யாவினது நாட்கள்.



நினைப்பு நெருடலில்
நீண்ட நாட்கள்
கல்லூரி நாட்களில் கனதியில்
யாவருமாய்
அனைத்து முன்னெடுப்பிலும்
மேகலா வித்யா
ஜோடியாய் இணைந்து
ஜோடித்த நாட்கள்
முற்றது வந்தது முன்னாய் நின்றது

தந்தை மாற்றலால் தரிப்பிடம் மாற
தனித்து வித்யா தளர்வாய் சிலநாள்
வாழ்வுப் படிகள் பலதாய் மாறின.
அவ்வழிப் படியில் அசையும்
பொழுதில்
அன்று
ஆயுத சலப்பில்
ஆப்பரேஷன் தியேட்டரில்
அனைத்தும் அடங்க ஆழமாய்
ஊசியது மெல்ல மெலிதாய்
நினைவது தேய
பச்சை உருவில் பலரது முகங்கள்
மொத்த வெளிச்சமும்
முகமதை நோக்கிட
முக்காட்டு முகங்கள் முந்தின
நேசமாய்
"வித்யா வித்யா"
மேகலாய சாம்ராஜ்ய குரலாய்
ஈரமாய் அவளை இழுத்தது!
என்னது!! ஆப்பரேன்?
அது முடிந்தது! முடித்தனர்!!
முடிவாய்
நினைப்பது மீள
வித்யா நினைவில் மேகலாவாக
"வித்யா நீ"
கனவு பொய்த்து மேகலா மெய்த்து.
"நேற்றைய டியூட்டி என்னது வித்யா
மாற்றிவிட்டு ஏகிடவில்லை"
மெலிதாய் அழுகை
"என்றோ சொன்னது

இன்று பலித்ததா? ஏனிது வித்யா"
ஏக்கமாய் இளைந்தனள்.
வெள்ளைப் புறாவாய் விசும்பலில்
குனிந்தாள்
"எங்கே உன்னவன்? அருண்?"
"கணவரா காத்திரு பாரேன்
ஆவலாய்த் தேடலோ?"
ஏதோ கேட்டாள்
மெதுவாய் சிரித்து வலியை
மறைத்தாள்
வலியும் மயக்கமும் மாறியே வந்தன
ஏதோ குரலாய் இருவரின் பேச்சங்கே
எலியைப் பிளப்பதன் அன்றைய பேச்சு
திரும்பின தெளிவில்
"வித்யா உன்னவன் வெரி நைஸ்!"
என்றவள்
அடிக்கடி சொன்னாள் ஆதரவோடு
அடித்து போனது உண்மை ஒன்று
அங்கே — இரு
மௌனத்தின் மெய்யது மரணித்துப்
போனது
ஒவ்வொரு நாளுமாய்
உயிர்ப்பூட்டினாள்
உண்மையதனை ஒழுங்காய்
விழுங்கினள்
வித்யா தன்னது உபாதையால்
ஸ்தம்பிதமாக
வெட்டும் கொத்தும்
வெறுத்த மேகலா
எப்படி வந்தாள் இத்துறைக்குள்ளாக
வினாவதை வித்யா எடுக்கும்
போதெல்லாம்
விழியும் சிரிப்பில்
விதி இதுவென விடைத்தாள்

"உடலது கீற்றின் உண்மை ஏதோ
உரைத்திடு!"
ஒளிக்கா(து) அறிய விரும்பினள்
ஆயினும்
காரணமின்றிக் கலங்கியபடி

கடத்தி கடத்தி காய வலியிடை
கலகலப்பூட்டினள் மேகலா
ஆஸ்பத்திரி வாசம் அந்நியமாக்க.
பிரியாவிடையுடன்
பிரிந்தனர் இருவரும்
அவளைத் தேடலில்
அலைச்சலாய் வித்யா
மேகலா எங்கே உன் ஊர்வலத்தேசம்?
உண்மை ஒன்றை உன்னிடம்
எடுக்க — வித்யா
எலியைப்பிளந்து குறிப்பது தந்தவள்
அவளது பிளவின் ஜதார்த்தம் என்னே
கண்ணது கட்டிக் காணாமற்
போனதும்
வித்யா தேடலில் இன்றுமாயுள்ளது
எடுத்த குறிப்போடு எப்போது
வித்யாவிடம்
கொடுப்பதாய் எண்ணம்
கொட்டுக ஏற்க!
வெள்ளை உடையில்
வெருட்டுதல் நலமோ?
□

சத்தியத்தின் சுவடுகள்...
அடுத்த இதழில்

# இளைய தலைமுறைகள்

-ஏ.ஜே.ஞானேந்திரன்.

தலைமுறை தலைமுறையாக என்பது வாழ்க்கையில் அங்கமாகிட்ட ஒன்று. தலைமுறையாகத் தொடரும் பாரம்பரிய பழக்க வழக்கங்கள் சம்பிரதாயங்கள் என்பவை நமக்கு எப்பொழுதுமே முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பதுண்டு.

தலைமுறைகள் மாறுகின்றபோது தப்பித்தவறி சம்பிரதாயக் கோட்பாடுகள் பாழாகிவிடக்கூடாதேஎன்பதில் விழிப்பாக இருப்பவர்கள் தமிழர்களாகிய நாங்கள்.

சுருக்கமாகக் கூறுவதானால் தலை முறை தலைமுறையாகத் தொடர்பவை தடம்புரண்டு போய்விடக்கூடாதே என்பதில் தீவிரவாதிகளாகிவிட்டவர்கள் நாம்!

இன்றைய இளையதலைமுறையினரை நோக்கும்போது குறிப்பாக ஒன்றை நாம் நோக்க வேண்டியவர்களாகிறோம்.

காலம் என்பதுதான் அது!

எப்படியான காலகட்டத்தில் எங்கு வாழ்ந்துகொண்டிருக்கிறாகள் என்பது மிகமுக்கியமாகக் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய ஒன்று என்பதில் சந்தேகமேயில்லை.

நாட்டின் போர்ச்சூழலில் சொந்த மண்ணிலிருந்து இடம்பெயர்ந்து அந்நியமண்ணில் வாழ்கின்ற அவலம் எமது இளைய தலைமுறையினருக்கு முதற்தடவையாகச்சம்பவித்திருக்கின்றது புரியாதமொழி தெரியாத முகங்கள்என்று முற்றிலும் வித்தியாசமான ஒரு சூழலில்

நமது இளைய தலைமுறையினர் வாழ்க்கையெனும் ஏணிப்படிகளில் ஏறத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்தப் புதிய சூழல் எந்த அளவிற்கு இவர்களை மாற்றியிருக்கின்றது? இனியும் எந்த அளவுக்கு மாற்றிவைக்கப் போகின்றது? நியாயமான கேள்விகள்தான்.

தாயகத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற வெறியோடு தம்முயிரைத் துச்சமென மதித்து தாய்மண்ணில் போராடிவரும் நமது இளைய தலைமுறையினர் ஒரு பக்கமிருக்க வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்ற நமது மற்றைய தலைமுறையினரைச் சற்று நோக்குவோம்.

பணத்தில் புரளப் புரள பல இளைய தலைமுறையினருக்கு இந்த மண்ணில் கிடைத்திருக்கும்வாய்ப்பு அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பை ஏற்படுத்தி யிருக்கின்றது?

பணத்தில் புரள்கின்றார்கள் என்ற பதம் ஒருவேளை உங்களுக்குத் தவறாகத் தென்படலாம்.

ஆனால் நிஜம் அதுதானே!

சொந்தமண்ணில் சிலஆயிரங்களைக் கூடச் சம்பாதிக்க முடியாதவர்களிடம் இப்பொழுதெல்லாம் இலட்சக்கணக்கில் அல்லவா பணம் புரள்கின்றது.

பணம் புரள்கின்றது சரிதான் என்றாகிவிட்டதும் இந்தப் பாரிய தொகையை இளம் சமுதாயம் எப்படிக் கையாள்கின்றது என்ற கேள்வி எழுகின்றது.

எப்படிக் கையாள்கின்றார்கள்?

குரங்கின் கையில் கிடைத்த பூமாலையின் கதைதான் என்று சொல்ல முற்படும்போது தம்மைக் குரங்குகளாக்கிவிட்ட சினம் நமது இளைய தலைமுறையினருக்கு ஏற்படலாம்.

இயற்கையான சீறல்!

ஆனால் அவர்கள் அங்கே குரங்குகளாக வர்ணிக்கப்படவில்லை. கையில் கிடைத்த ஒன்றின் மதிப்பை உணர்ந்து செயற்படத் தவறிய வர்களாகவே கருதப் படுகின்றார்கள்.

சிறியவயதிலேயே பெரியதொகையைச் சம்பாதிக்கத் திடீரென இவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு, அடுத்து என்ன செய்வது என்று அறிய முடியாத ஒருவகைத் திணறலை ஏற்படுத்தி விடுகின்றது. கிடைத்த பணத்தை எப்படி ஒழுங்காகச் செலவழிப்பது, சேமிப்பது எப்படி என்ற அனுபவமின்மை மனம்போன போக்கில் பணத்தை வாரியிறைக்க வழி சமைத்துக் கொடுத்து விடுகின்றது கையிலுள்ள பணத்தின் பலம் பல தான்தோன்றித்தனமான செயற்பாடுகளின் காரணியாகி விடுகின்றது.

புதிய நாடு புதிய சூழல்.

புதிய சினேகிதங்கள் வராதிருக்குமா?

புதிய உறவுகளுக்குப் பாலமமைக்கப் படுகின்றது. புதிய பழக்கவழக்கங்களும் விளையாட்டுவிளையாட்டாகத் தொற்றிக் கொள்கின்றன.

ஏன் இதையெல்லாம் செய்கிறாய் என்று அதட்டிக் கேட்க உறவுகள் அருகே இல்லாதது இவர்களுக்கு அரிய வாய்ப்பாகிவிடுகிறது.

பெண்களுடனானசகவாசம், மதுபானப் பிரியம், போதைமருந்துப் பாவனை என்றெல்லாம் புதியவரவுகள் தேடிவந்து விடுகின்றன.

போலியான புதிய உறவுகளின் மோகம், காட்டுவெள்ளம்போல் உள்ள உறவுகளின் பற்றினை அடித்துச் செல்லக் கைகொடுக்கின்றன.

இங்குள்ள இளைய தலைமுறையினர் எதிர்நோக்கும் பெரிய பிரச்சினை, மொழிபற்றிய பிரச்சினைதான்.முற்றிலுமே அறியாத ஒரு மொழிபேசுகின்ற வர்க்கத்தினரிடையே இவர்கள் வாழ முற்படும்போது அந்த மொழி அறிவு அவர்களுக்கு அவசியமான ஒன்றாகி விடுகின்றது.

ஆனால் இந்த அவசியமே காலப் போக்கில் அவர்கள் தம் தாய்மொழிமீது பற்றின்மையை ஏற்படுத்திவிடுகின்றது என்பது ஜீரணிக்க முடியாத கசப்பான ஒரு நிஜந்தான்.

வெளிநாடுகளில் வதியும் சில பெற்றோர்களும் என் பிள்ளைக்குத் தமிழ் சரியாகப் பேசவராது என்று பெருமையோடு ஏனையோரிடம் கூற முற்படுவதும் பிள்ளையின் தாய்மொழி அறிவை மழுங்கடிப்பதற்கு உறு துணையாக இருப்பதும் பனையால் விழுந்தவரை மாடேறிமிதித்த கதையாகி விடுகின்றன. தமிழராயிருந்தும் தமிழில் சம்பாஷித்து அந்நியர்மத்தியில் அவனோ அவளோ தன்னை இனம்காட்டிக் கொள்ளமுடியாத அவலமேஎஞ்சுகின்றது.

நமது தலைமுறைகள் நன்றாகவே மாறிப்போய்விட இந்த மொழி என்பது வாழ்க்கையில் முக்கிய பங்கேற்கிறது என்பதில் என்ன சந்தேகம்?

நிச்சயமற்ற இந்த அந்நிய நாட்டு வாழ்க்கைக்குரிய ஒரு முற்றுப்புள்ளி இடப்படும்போது தாய்மண்ணில்

இவர்கள் எந்த மொழியில் உரையாடப் போகின்றார்கள்? சுருங்கக் கூறுவதாயின் இங்கு வாழ்கின்ற இளைய தலை முறையினர் பல சிதைவுகளுக்கு உட்பட்டு வருகின்றார்கள் என்பதை எவர்தான் மறுக்க முடியும்?
கலாச்சாரங்கள் சிதைக்கப்படுகின்றன.
தாய்மொழி மீதுள்ள அறிவு அதன் மீதுள்ள பிரியம் சிதைக்கப்படுகின்றது.
உறவுகளில் வைத்திருந்த பாசம் சிதைக்கப்படுகின்றது.
தற்காலிகமான அந்நிய மண்ணின் சுகத்தில் சொந்தமண்ணின் பற்று சிதைக்கப்படுகின்றது.

இதுகாலவரை அந்நிய மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிற இளைய தலைமுறையினர்பற்றியே அலசிப் பார்த்தோம்.

ஒட்டுமொத்தமாக அந்நிய மண்ணில் வாழும் இளைய தலைமுறை யினரெல்லாம் இப்படித்தான் என்று நாம் சொல்ல முற்படவில்லை. அப்படிச் சொல்வதும் மகா தவறு.

நெல்லைப்பற்றிச் சொல்ல முற்படாமல் அதனிடையே முளைவிட்டிருக்கும் புல்லைப்பற்றி சொல்வதுதான் சாலப் பொருத்தமாயிருக்கும்.
நெல்லிருக்கும் இடத்தில் புல்லும் இருக்கின்றது என்று நாம் சொல்லாமல் யாருக்கும் தெரியப்போவதில்லையே!

சொந்த மண்ணிலேயே இன்னமும் ஒட்டிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற நமது இன்னொரு தலைமுறையினரின் வாழ்க்கை மகாமோசமானது. ஏனையோர் நெஞ்சில் கழிவிரக்கத்தை ஏற்படுத்த வல்லது.
நாளைய பொழுது விடியுமா? என்ற ஏக்கத்தோடுபடுக்கைக்குச் செல்பவர்கள் இவர்கள். காட்டுமிராண்டிகளின் கண்மூடித்தனமான வெறித் தாக்குதல்களிலிருந்து தப்ப வழி தெரியாது தினமும் வர்க்கத்தினர் இவர்கள். பேரிரைச்சலோடு வானில் வட்டமிட்டு கொட்டும் குண்டுகளில் பெற்ற தாய், பேரன்புமிக்க தந்தை என்று பல பிரியமான உறவுகள் கண்முன்னே துடிதுடித்து இறக்கும் உறவுகளைத் தொலைத்துவிட்டு நிற்பவர்கள். வெளிநாட்டில் பல சுகங்களோடும்வாழ்ந்துகொண்டிருக்கும் இளைய தலைமுறைச் சகோதரங்களின் வாழ்க்கைக்கு முழுக்க முழுக்க முரண்பாடான வாழ்க்கை. எதிரும் புதிருமான வாழ்க்கை.

மரணத்தைத் துச்சமென மதித்து தாய்மண்ணை வென்றெடுத்தாக வேண்டும் என்ற உத்வேகத்தோடு செயற்படும் இன்னொரு இளைய தலைமுறையினரும் இங்கேதான் இருக்கிறார்கள்.

ஆசைகள் பலவற்றிற்குச் சாவுமணி அடித்துவிட்டு சுதந்திரஈழம் மலர வேண்டும் என்ற ஒரே ஆசையை மனதில் வளர்த்துக்கொண்டு வாழத் தலைப்பட்டுள்ள இந்த இளைய தலைமுறையினர் வித்தியாசமானவர்கள்.
வாழ்க்கை என்பதே முரண்பாடான கலவைகள் கொண்டதுதானே என்பது போல நமது இளைய தலைமுறையினர் அமைக்கும் எதிர்கால சமுதாயம் பல முரண்பாட்டு நிகழ்வுகளுடன் அமையப் போகின்றது என்பது நிதர்சனமாகத் தெரியும் உண்மை!

□□□

பூவரசு 8வது ஆண்டு நிறைவுப்போட்டியில்
இரண்டாவது பரிசுபெற்ற கட்டுரை



# ஆன்மீக சிந்தனைகள்

**மழை பெய்கிறது. ஏரி மேடிட்டிருந்தால்
அங்கே தண்ணீர் தங்காது.
நல்ல விசாலமாக ஆழமாக இருந்தால்
மழைத்தண்ணீர் அத்தனையும்
அங்கே தேங்கிவிடுகிறது.
அதுபோல நமது மனமும் பரோபகார
சிந்தனையினால் விசாலமாக இருந்தால்
ஆண்டவனுடைய கருணை நிறைந்து நிற்கும்.
-சங்கராச்சாரிய சுவாமிகள்**

சொர்க்கத்தை நாம் தேடிப் போகவேண்டியதில்லை.
பிறரிடம் நாம் காட்டும் அன்பு, நல்லொழுக்கம்,
கட்டுப்பாடான வாழ்க்கை, நமக்கு உதவமுடியாத
ஜீவன்களிடமும் காட்டும் தயை, இவற்றினால்
நம்முடைய மனதுக்குக் கிடைக்கும் நிறைவே சொர்க்கம்.
**-சத்யசாயி**

**ஆன்மிக விழிப்பு பெற்றவன்
பயத்திலிருந்து நீங்கியவனாவான்.
-புத்தர்**

நல்லது ஒன்றையே நாம் நோக்கவேண்டும்
மணலும் சர்க்கரையும் கலந்த குவியல் கிடக்கிறது
அங்குசென்று எறும்பு சர்க்கரையைமட்டுமே எடுத்துக் கொள்கிறது
அதேபோல்தான் நாமும் செய்யவேண்டும்
-சுவாமி பிரேமானந்தர்.

# எங்கள் இளந்தளிர்கள்

அறிஞர் வாக்கு.

**உண்மையே கடவுள்.**
**எல்லா அறங்களும் உண்மையைப்பின்தொடர்கின்றன. -வால்மீகி**

உண்மையே உள்ளத்தூய்மையை உண்டாக்கும்.
உள்ளத் தூய்மையே ஒழுக்கத்தின் உயிர்நாடி. -மகாவீர்

**உண்மையான பெரிய மனிதனுக்கு அடையாளம்**
**பணிவாக இருத்தல். -ரஸ்கின்**

உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம்.
ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது.
-விவேகானந்தர்.

நாம் வாழத் தமிழ் வாழும்
தமிழ் வாழ நாம் வாழ்வோம்.





## நாடும் வீடும்

—கஜிநாத் தவம்.

நாம் வாழ்ந்த நமது தேசமான ஈழம் எங்களின் உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட தாய்மண்ணாகும். இந்த மண்ணிலே எம் பெற்றோர்கள் பிறந்து எம்மையும் பெற்றெடுத்து வளர்த்தார்கள் என்பதை எண்ணும்போது எமக்கு பெருமையாக இருக்கின்றது.

ஈழத்தாய் மண்ணிலே இன்று நடைபெறும் போரால் எத்தனை ஆயிரம்பேர்கள் மாண்டழிந்து போயுள்ளனர். அதனால் இன்று எம்மக்கள் கண்ணீரும் கம்பலையுமாய் வாழ்கின்றனர். உண்ண உணவில்லை. உறங்க இடமில்லை. கண்ணிறைந்த உறவுகளோடு கலந்துவாழ முடியவில்லை. துன்பங்களாலும் துயரங்களாலும் காடுகள் மேடுகள் பற்றை புதர்களுக்குள் மறைந்து வாழும் மக்களின் துன்பங்கள் சொல்லிலடங்காது.

பள்ளி சென்று கல்வி பயிலவும் முடியாத அபாய நிலைமை. கடந்த சில ஆண்டுகளாக கோவில்கள் பாடசாலைகள் வீடுகள் தேவாலயங்களில் அகதிகளாக தங்கியிருக்கும் மக்கள்மீதும் பாடசாலை மாணவர்களின்மீதும் குண்டுகளைப்போட்டு உடல் சிதறி இறந்த எம் தேசத்து உறவுகளும் மாணவர்களும் எத்தனைபேர். எமது யாழ்ப்பாண மண்ணுக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்கள், மருத்துவப் பொருட்கள் என்பவற்றை அனுப்புவதற்கு தடைபோட்ட அரசாங்கம் எம்தமிழ் மக்களை அடியோடு அழிக்க வேண்டும் என்றே எண்ணி பல தடை உத்தரவுகளை விதித்துவருகிறது.

உணவுக்குத் தடை, மருந்துக்குத்தடை கல்விக்குத் தடை தமிழ்மக்களின் தேவைகளுக்கெல்லாம் தடை இக் கொடுமைகளினால் எமது மக்கள்படும் துன்பம் ஒன்றிரண்டல்ல. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றே தமிழீழ விடுதலைப் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இப்போராட்டத்திலே தங்களை அர்ப்பணித்து தாய்மண்ணுக்காக தங்களை தியாகம் புரிகின்ற மாவீரர்களுக்காக உலகமெங்கும் விழாக்களெடுத்து வீரவணக்கங்களும் செலுத்தப்படுவதை நாம் இன்றும் அறிவோம்.

எமது மண்ணைக் காக்க எமது உறவினர் போராடி வருகின்ற வேளை புலம்பெயர்ந்து வாழ்கின்ற நாமும் நம்மாலான பங்களிப்பினைச் செய்வது கட்டாய கடமையாகும். எங்கள் உறவுகளுக்காக நாம் முடிந்த அளவு உதவிகளையும் ஒற்றுமைக் கரங்களையும் உயர்த்தி நிற்போம்.

நாடு சிறந்தால்தான் வீடும் சிறக்கும். அமைதி வாழ்வு திரும்பும். உயிர் அழிவுகளும் துன்ப துயரங்களும் இல்லாமல் போகும்.

அதனால் ஒவ்வொரு மனிதர்களும் தங்களின் தாய்மண் என்ற தேசப்பற்றோடு சுதந்திர உணர்வோடு நாட்டுக்காக தங்களை அர்ப்பணிக்கவேண்டும். நாடு நமக்கு என்ன செய்தது என்பதைவிட நாம் இந்த நாட்டுக்கு என்ன செய்தோம் என்று ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். சுயநலம் மறந்து பொதுநல நோக்கொடு நாடு சிறக்க ஒற்றுமையாக பாடுபடுவோம்.

அப்போதுதான் நம் ஒவ்வொருவர் வாழ்வும் சிறக்கும்.

நாடு வளம் பெற வீடு நலம்பெறும் என்ற கருத்துக்கிணங்க ஒன்றுபடுவோம். தமிழர் என்ற உணர்வோடு வாழ்வோம்.

□□□

X-MAS

கிரேக்க மொழியில் கிறிஸ்டோஸ் என்றால் ' காப்பாற்ற அவதரித்தவர் '(Messiah) என்று அர்த்தம். இப்போது வழக்கில் இல்லாவிடினும் ஒருகாலத்தில் ஆங்கிலத்தில் (Mas) மாஸ்' என்னும் வார்த்தைக்குப் பண்டிகை அல்லது கொண்டாடுதல் என்று பொருள் இருந்துவந்தது.

கிறிஸ்து என்ற வார்த்தையைச் சுருக்கமாக கிரேக்க மொழியில் X என்ற எழுத்தாலும் குறிப்பிட்டார்கள். ஆகவேதான் கிறிஸ்துமஸ் என்பதை ஆங்கிலத்தில் X-Mas என்றும் எழுதும் பழக்கம் வழக்கில் உள்ளது.





# தமிழ்வாழ நாம்வாழ்வோம்

—ஆன் வினோலினி நடேசன்.

தமிழர்கள் தாம் பிறந்து வாழ்ந்த நாடுகளைவிட்டு வேறு நாடுகளுக்குக் குடிபெயர்வது என்பது இன்று நேற்றல்ல. காலங் காலமாகவே நிகழ்ந்து வந்திருக்கின்றது.

இவர்கள் வேலைவாய்ப்பு உயர்கல்வி வியாபாரம் நல்வாழ்வு ஆகியவற்றின் காரணமாக நாட்டைவிட்டு வேறுநாடுகளுக்குக் குடி பெயர்ந்தனர். ஆனால் இன்று இலங்கை அரசின் கெடுபிடியால் எம் இனமக்கள் உயிர் பிழைத்தால் காணும் என்ற நோக்குடன் அயல்நாடுகளுக்கு அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர். ஈழம் தமிழர்களுக்கு புதிய நாடு அன்று. எத்தனையோ நூற்றாண்டு காலமாக தமிழ்மொழி அங்கு பயின்று வருகின்ற ஒரு மொழியாகும்.

தமிழ்மொழி ஈழத்தில்மட்டுமல்ல எத்தனையோ நாடுகளில் வாழும்மொழியாக பன்னாட்டு மொழியாக வருவதும் வரலாற்றுச் சிறப்புத்தான். தமிழ்மொழிக்கல்வியில் ஆர்வம் காட்டுவதினால் உலக அரங்கில் தமிழ் வளர்ச்சிபெற்றுவருகின்றது.

பல்துறை அறிஞர்கள் எழுத்தாளர்கள் ஆக்கதாரர்கள் தமிழ்மொழி பண்பாடு வரலாறு இலக்கியம் இலக்கணம் மதம் முதலியவற்றை ஆய்வுசெய்து அவை செம்மையாக வாழ்வதற்குரிய வழிவகைகளைச் செய்து கொண்டும் இருக்கின்றார்கள்.

உலகத்தமிழர் பரவிக் கிடக்கும் இடங்களில் எல்லாம் தமிழ் கற்பிக்கும் முயற்சிகளும் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. கலை நிகழ்ச்சிகளும் மன்றங்களும் போட்டிகளும் பலமுறைகளில் கையாளப்பட்டு வருகின்றன. ஆனால் தமிழ்கற்று வெற்றிகண்டோர் மிகக்குறைவு எனலாம். அகதிகளாக அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் தாங்கள் வாழும் நாட்டையே தாயகமாகக் கருதாமல் தமிழையும் தமிழப்பண்பாட்டையும் மறவாதவர்களாக வாழ்வதோடு, அம்மக்களோடு ஒன்றித்து ஒத்துழைத்தும் எமது தமிழைப் பேணிப் பாதுகாத்து வாழ முற்படவேண்டும். அன்று தேமதுரத் தமிழோசை உலகமெலாமல் பரவும்வகை செய்தல்வேண்டும் என்ற பாரதியின் கனவு நனவாகி வருவதை காண்கின்றோம். அன்று மூவேந்தர்கள் தமிழைப்போற்றியதுபோல சங்கம் அமைத்து வளர்த்ததுபோல் நாமும் தமிழைப்போற்றிவாழப் பழகிக்கொள்ளவேண்டும். தமிழத்தாயகம் உயர்ந்தால் தமிழும் உயரும்.

இந்த உண்மையைப் புரிந்துகொண்டு வாழ்வோம். தமிழன் என்று ஒவ்வொரு தமிழனும் மார்தட்டிச் சிறப்பாக வாழ்ந்தால் தமிழ்மொழி அனைவராலும் போற்றிப் புகழப்படும். இதனால் தமிழும் வாழும். நாமும் சிறப்பாக வாழ்வோம்.

□□□

# எனது அம்மா

—ஆனந்த் குலதாசன்

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'
— இது ஔவைப்பாட்டியின் பொன்மொழி.
ஆம்! நான் இந்த அழகிய பூமியிலே பிறந்ததும் முதலில் தெரிந்துகொண்டது எனது அம்மாவையே. அதன்பிறகே அப்பாவை அறிந்தேன். அவர்கள் இருவருமாக எனக்குத் தெய்வத்தைப் போன்றவர்கள்.
'தாய் சொல்லைத் தட்டாதே!'என்னும் பழமொழியும் உண்டு.
அம்மா எனக்குப் பேசக் கற்றுத் தருகின்றா.
நானும் அம்மா என்று அழைத்த பின்பே மற்றவைகளைப் பேசப் பழகிக் கொண்டேன்.

எனது அம்மா எனக்கு நோய்வந்தபோதெல்லாம் இரவு பகலாகக் கண்விழித்து என்னைக் காக்கின்றார். எனக்கு சிறந்த அறிவுரைகள், சிறந்த அறிவுக்கேற்ற கதைகள் மற்றும் பாடங்கள், தீய பழக்கங்களினால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றை எனக்கு எடுத்துரைப்பா. அதனால் எதிர்காலத்தில் நான் சிறந்த அறிவாளியாக வளரவும் வாழவும் வழிவகுக்கின்றா.

அத்துடன் நான் இங்கே ஜெர்மனியில் பிறந்தாலும் அன்னிய கலாச்சாரங்களில் வாழ்ந்தாலும் அன்னிய மொழிகளைப் படித்தாலும் நாம்தமிழர்கள். எங்களுக்கென்று ஒரு மொழி உண்டு நான் அதனைக் கற்பது மிகமிக அவசியம். நாளை நான் எனது தாய்நாட்டிற்குப் போகும்போது அங்கு எனது உறவினர்களோடு கதைப்பதற்கு தமிழ்மொழி வேண்டும் என்பதை எனக்கு உணர்த்தி என்னை சிறுவயதுமுதலே தமிழ்த்திறன் போட்டிகள், பரீட்சைகள், மேடைப் பேச்சுக்கள், பாடற் போட்டிகள், நடனம், நடிப்புத்திறன், இசைத்திறன்போன்ற எல்லாப் போட்டிகளிலும் என்னை ஈடுபடுத்தி நான் அதன்மூலம் எனது மொழியின் அறிவைப் பெறவும் அதிக பரிசில்கள் வாங்கவும் என்னை மற்றவர்கள் பாராட்டிப் புகழவும் எனக்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்றா.

நான் இன்று தமிழில் இதை எழுதுகிறேன் என்றால் அதற்கும் காரணம் எனது அம்மாவின் ஊக்குவிப்பே. எனவே அன்பான தம்பி தங்கைகளே! நீங்களும் என்னைப்போல் சிறுவயதுமுதல் உங்கள் அம்மாவின் சொற்கேட்டு எங்கள் தாய்மொழியைக் கற்று நல்ல பண்புகளையும் கற்று சிறந்த அறிவாளிகளாக வளரவேண்டும்.


'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்'

□□□





## இதயம் இருக்கின்றதே...



மார்பு அறையில் நுரையீரல்களுக்கு நடுவில் செம்பழுப்பு நிறத்தில் ஏறக்குறைய 200 கிராம் நிறையுடன் இருப்பது இதயம்.
அசுத்த இரத்தத்தை உடல்பகுதிகளிலிருந்து வாங்கி நுரையீரல்களுக்கு அனுப்பி பிராணவாயு கலந்த சுத்த இரத்தமாக மாற்றி மீண்டும் நுரையீரல்களிலிருந்து பெற்று மேலெழும்பச்செய்து அதை உடல் முழுவதும் அனுப்புகிறது இதயம்.
மனிதக் கரு உண்டானபின் 18வது நாளிலே பொட்டுப்போன்ற அளவில் இருக்கும். அப்போதே அந்தக் கருவிற்குத் துடிப்பு உண்டாகிவிடுகின்றது
தாயின்கருப்பையில் கரு உருவாகி 35 நாட்களுக்குமேல் 56 நாட்களுக்குள் இதயம் முழுவடிவம்பெற்று விடுகின்றது.
இதயம் சுருங்கி விரியும் நிகழ்ச்சிதான் இதயத்துடிப்பு ஆகும்.
குழந்தையின் இதயத்துடிப்பு 140 தடவை.
வயதானவரின் இதயத் துடிப்பு நிமிடத்திற்கு 76 தடவை.
ஒருவன் படுத்து இளைப்பாறும்போது அவனது இதயம் செலுத்தும் இரத்தத்தைவிட அவன் ஓடும்போது 10 மடங்கு அதிகமானஇரத்தம் ஒவ்வொரு நிமிடமும் இதயத்தால் வெளியே தள்ளப்படுகின்றது.

இதயத்துடிப்பை அறிய உதவும் ஸ்டெதாஸ்கோப்பை 1816ல் கண்டுபிடித்தவர் பிரான்ஸ்நாட்டைச் சேர்ந்த ஹையாசிந்த் லேன்னக்.


இதயத்தில் உள்ள இரத்தம் சுமார் 6 லிற்றர். ஆனால் இதயத்திற்கு வந்துபோவதைக் கணக்கிட்டால் 7500 லிற்றர்.
ஒரு மனிதன் சுமார் 70 ஆண்டுகள் வாழ்வதாக இருந்தால் அவன் இதயம் சுமார் 255 கோடி தடவைகள் துடிக்கும்.
சிறிதாக இருக்கும் உயிரினங்களுக்கு இதயத்துடிப்பு அதிகமாகவும் பெரிதாக இருக்கும் உயிரினங்களுக்கு இதயத்துடிப்பு குறைவாகவும் இருக்கும்.
இரத்த அழுத்தம் என்பது இதயம் சுருங்கும்போது அதன்அழுத்தம் கூடிக் குறைவதையே குறிக்கும்.
இதில் மாறுதல்கள் ஏற்படும்போது இதயக்கோளாறுகள் வருகின்றன.

## இதயத்திற்குப் பயிற்சி.

எல்லா உறுப்புக்களுக்கும் பயிற்சி தேவைப்படுவதுபோல்
இதயத்திற்கும் பயிற்சிவேண்டும்.
அப்போதுதான் இதயம் வலுப்பெறும். நீண்டநாள் வேலைசெய்யும்:
நாமும் அதிகநாள் வாழமுடியும்.

வேகமாக நடப்பது இதயத்துக்கு நல்ல பயிற்சி ஆகும்.
சைக்கிள் ஓட்டுவதும் நீந்துவதும் இதயத்தைப் வலுப்படுத்தும்.

நாள் தோறும் மூச்சுப் பயிற்சி செய்யவேண்டும். இதை பிராணாயாமம் என்பார்கள் பெயரைப்பார்த்து மிரளவேண்டாம். சாதாரண மூச்சுப் பயிற்சிதான்.
அந்தப் பயிற்சிசெய்யும்முறை-
நன்றாக நிமிர்ந்து அமருங்கள்.
வலக்கையால் மூக்கைப் பிடியுங்கள். மூக்கின் ஒருதுளை வழியாக ஆழ்ந்த மூச்சு எடுங்கள். 5 மணித்துளி நேரம் மூச்சை அடக்குங்கள். பின்பு அடுத்த துளைவழியே மெல்ல மூச்சை விடுங்கள்.
பிறகு இந்தத் துளைவழியே ஆழ்ந்த மூச்சை உள்ளிழுத்து அடுத்த துளைவழியே மெல்ல விடுங்கள்.
இவ்விதம் ஒவ்வொரு துளையிலும் 5 முறை செய்யுங்கள்.
இதயம் வலுப்படும். இரத்தம் சுத்தமடையும்.
மாரடைப்பு நோயாளிகள் நாள்தோறும் 3 வேளை செய்வது நல்லது.
காலை எழுந்தவுடன், மதியம், மாலையில் செய்யவேண்டும்.



## உலகத்தில் மிக உயரமான கட்டிடம்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்திலுள்ள 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்'(Empire State Building)தான் உலகத்திலேயே மிக உயரமான கட்டிடமாக இருந்தது 1971ம் ஆண்டு வரையிலும்.
இதன் உயரம் 1250 அடி.
ஆனால் 1972ல் நியூயோர்க் உலக வர்த்தக மையத்திற்கு இந்தப் பெருமை கிடைத்தது. அதன் உயரம் 1350 அடி.
1973ம் ஆண்டு மே 4ம் திகதி சிகாகோ நகரில் 110 மாடி கொண்ட சியர்ஸ் தூபி எழும்பியது.
இதன உயரம் 1454 அடி.இப்போது உலகிலேயே மிக உயர்ந்த கட்டிடம் இதுதான். சியர்ஸ் தூபியின் பணி 1970 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பித்தது.
1973 மார்ச் 16ம் திகதி எழும்பிய அதன் 104வது மாடி எல்லாக் கட்டிடங்களையும் மிஞ்சிவிட்டது.
அதன்பின் மேலும் 6 மாடிகள் கட்டப்பட்டன.
16,000 யன்னல்களைக்கொண்ட இந்தக் கட்டிடத்தில் 16,700 மக்கள் வாழ்கின்றார்கள்.
உலகிலேயே வேகமாகச்செல்லும் லிஃப்ட்டும் இக்கட்டிடத்தில்தான் இருக்கிறது.
இதன் வேகம் 32 கி.மீ.
103வது மாடிவரை செல்ல 45 வினாடிகள் போதும்.
கண்ணாடி மற்றும் உருக்குப்பெட்டிகளை இணைத்து இக்கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளது.இதைக்கட்டி முடிப்பதற்கான செலவு எவ்வளவு தெரியுமா? 20கோடி டாலர்!

தகவல் — சங்கவி.



# இலையுதிர்கால மரமொன்று....

-ஜெகதீஸ்வரி இராஜரட்ணம்.

என்ன அப்படிப்பார்க்கிறீர்கள்?
பசுமை இழந்தபட்டமரம்போல் நிற்கின்றேன் என்றா?
இது எங்களின் இறப்பு அல்ல. பருவமாற்றம்.
உங்கள் பாஷையில் காலத்தின் கோலம் என்றுகூடச் சொல்லலாம்.
வசதியாக வாழ்ந்தமனிதர் தங்கள் செல்வங்கள் எல்லாம் இழந்து நிற்கும் நிலைக்கு ஒப்பானது எங்களின் இந்தத் தோற்றம்.
வசந்தத்தில் நாங்கள் வளமாக வாழ்ந்தபோது பிறருக்கு காய், கனி, பூக்கள், நிழல் என்று எம்மால் இயன்றதை உதவி எமது வேர்களையும் நன்கு விருத்தி செய்துகொண்டதனால் இன்று எங்களிற்கு ஒவ்வாதகாலத்திலும் ஒடிந்துவிடாது வாழமுடிகிறது.
'தர்மம் தலைகாக்கும்!' என்று உங்கள் ஆன்றோர்கள் சொல்லியுள்ளார்கள்.
ஆனால் நீங்களோ வசதியாக வாழ்கின்றபோதில் இல்லாதவர்களை எண்ணிப் பார்ப்பது அரிதென்றுதான் எண்ணத்தோன்றுகிறது.
பொருள் உங்கள் கண்களை மறைத்துக்கொண்டிருக்கின்றது.
மனிதர்களுக்குச் சுயநலமே அதிகம் என்று எமக்குத்தெரியும்.
உணவிற்கும் உறைவிடத்திற்கும் மற்றும் தளபாடங்களிற்கென பலவழிகளில் உதவும் எங்களை உணர்ச்சியில்லாத ஒருவனை உதாரணத்திற்கு 'ஏ! மரமே' என்கின்றீர்கள். 'ஏ! ஜடமே' என்று வேண்டுமானால் விளிக்கலாம்.
ஏனெனில் நீங்களும் ஒருநிலையில் ஜடமாகப்போகிறவர்கள்தானே? அப்போது உங்களால் யாரிற்கும் பிரயோசனம்இருக்காது. ஆனால் இருந்தாலும் இறந்தாலும் நாங்கள் பிறருக்கு உதவியாகவே இருப்போம்.
உங்கள் உடலைச் சுமக்கவும்எரிக்கவும் நாங்கள் உடனிருப்போம். மனிதர்கள் இல்லாமல் மரங்களால் வாழமுடியும். ஆனால் மரங்கள் இல்லாமல் மனிதர்களால் வாழமுடியாது. இது உங்களிற்கும் எங்களுக்கும் உள்ள பாரிய வேறுபாடாகும்.

□□□





## அவன் யார்?

**காரணம் இல்லாமல் அவனுக்குக் கோபம் வரும்.**

**லாபம்தராத விஷயங்களைப் பற்றியே அவன் எப்போதும் பேசிக்கொண்டிருப்பான்.**


**வளர்ச்சியில்லாத மாறுதலை அவன் ஏற்றுக்கொள்வான்.**


**அர்த்தமில்லாமல் ஏதாவது கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பான்**

**சந்திப்பவர்கள் அனைவரையும் நம்பிவிடுவான்**

**விரோதிகளாக செயல்படுபவர்களை இனம்கண்டுகொள்ள முடியாமல் நண்பர்கள் என்று நம்பிக்கொண்டிருப்பான்.**

**அவனை யாரென்று தெரியுமா?**
**அவன் பெயர்தான்-**
**முட்டாள்!**





(பொள்ளாச்சி நசன் அவர்கள் வெளியிட்டுள்ள உள்நாட்டு அஞ்சல் உறையிலிருந்து)



# காலம் அனுமதிக்க மறுத்தால்.....

- எழிலன்.

இளமைக்கண்ணோட்டத்தில் என் கனவாய், நினைவாய் வந்து போகும் எத்தனை எத்தனை அனுபவங்கள்.
இளமையின் நெகிழ்ச்சியில் அதன் கிளுகிளுப்பில் அன்று அனுபவித்த சின்னஞ்சிறு அனுபவ சுகங்களின் மின்மினிப்பூச்சியொளிக் காட்சிகளை இதயம் அசைபோடும்போது, சில அனுபவங்களால் என் கண்கள் பனிக்கத் தொடங்குவதை உணர்கிறேன்.

என்னைத்தாக்கிய அந்தச் சின்னஞ்சிறு அனுபவங்களை மீண்டும் ஒரு தடவை அனுபவித்துப் பார்த்துவிட என் இதயம் துடியாய்த் துடித்தாலும் அது முழுமையாக நினைவில் வராமல் என்னை அலட்சியப்படுத்துவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாமலிருக்கின்றது.
அழுவதா அதற்காக?கூடவே கூடாது.
இது வீரமா? இல்லவே இல்லை.
வெறும்பம்மாத்து! ஆம்! நடக்கமுடியாததையும் அடையமுடியாததையும் இப்படி வெறுப்பதுபோல் காட்டிக்கொண்டால் வென்றுவிட்டதாக என்னை நானே திருப்திப் படுத்திக்கொள்ள முடியும் என்று என் பலவீனமான மனம் சொல்லுகின்றதை நம்புவதுபோல் நான் அதனிடமே நடிக்கின்றேன்.
மனம் பலவீனமானதல்ல. ஆனால் பலவீனமான மனிதர்கள் தமது மனங்களின் சக்தியை அமுக்கி வைத்துவிடுகிறார்கள். அதனால் அவர்களின் மனங்களும் அவர்களைப்போலவே தைரியமிழந்து நிற்கின்றன என்பதை என்னையே உதாரணமாக வைத்து நான் சிந்திக்கையில் எனக்கே வெட்கமாகவிருக்கின்றது.
எனது இளமையில் நானிழந்த ஓர் அரிய அறிமுகத்தை அடிக்கடி நினைத்துக்கொள்கிறேன்.

நான் படித்துக் கொண்டிருந்த அந்த இனியநாட்களில் நடந்த ஒரு சம்பவமிது.
எங்கள் கல்லூரிக்கு அருகிலேயே பெண்கள் பயிலும் கான்வென்ற்றும் இருந்தபடியால் தினசரி பசுமையாகப் பொழுதுபோய்க்கொண்டிருந்த காலம். எங்களுக்கு இடைவேளை நேரம் கிடைத்த அரைமணிநேரத்தில் அவர்களுக்கு இடைவேளை வரும்.
என் வகுப்பின் மாணவர்களில் சிலருக்கு மிகநல்ல உடல்வாகு. நான் சர்வசாதரண உடலன். என் போன்ற சாதாரண குரூப்பிற்குள் சொத்திகளை விரும்பி ஏற்றுக்கொள்வோம். ஏனென்றால் அவர்களையும்விட நாங்கள் மேலென்று மனதிருப்திகொள்ள முடியுமல்லவா? அதற்காகத்தான்.
இந்த 'பொடிபில்டர்' பயல்களின் கண்களும் ராஜநடைகளும் எங்கள் இடைவேளை நேரத்தில் இரு பள்ளிகளுக்கும் பொதுவாக இருந்த விளையாட்டு மைதானத்தில் வளையவரும்போது எனக்கெல்லாம் பெரிய ஏக்கமாகவிருக்கும்.
கௌதிமியும் தர்ஷினியும் மிகவும் கலகலப்பாக இவர்களின் நடைகளை ரசித்துப் பேசுவதை நான் எரிச்சலுடன் அவதானிப்பேன். இரண்டு அறைவிட்டு அடித்துத் துரத்தவேண்டும் போலிருக்கும். ஆனால் அது நடக்கப போவதில்லையே என்று குமைந்துகொண்டிருப்பேன்.

என் வகுப்பிலிருந்த செல்வராஜ் என் பக்கத்து மாணவன். வாட்டசாட்டமான உடலமைப்புக்கொண்டவன் அவன் நடந்தாலே அந்தநாளிலே சிவாஜியின் ராஜநடை தோற்றத்திலும் சகித்துக்கொள்ள முடியாத எரிச்சல் என் மனதுக்குள்ளும் ஒரே வேளையில் நடந்துகொண்டிருக்கும்.
அவன் நல்ல கலகலப்பானவன். நட்புறவும் அப்படித்தான்.
ஆனாலும் எனது கோழைமனதுக்கு அவனில் இனந்தெரியாத ஓர் எரிச்சல்.
அது பொறாமையினாலா! அல்ல வெறுப்பினாலா? அல்லவே அல்ல. அப்படியானால்?
அவனது கவர்ச்சியில் பெண்கள் பள்ளியின் கவனம் விழுவதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை. அடிக்கடி கண்ணாடி முன்நின்று கொண்டு வீட்டில் இருப்பவர்களுக்குத் தெரியாமல் என் உடலழகை அவதானிப்பேன்.
குரங்கிற்கும் தன்னழகு பேரழகுதான் என்ற உண்மை அப்போது நிதர்சனமாகும்.
கூடவே மனம்சொல்லும் 'உனது உடம்பு புடலங்காயுடம்பு. இதை செல்வராஜோடை ஒப்பிட்டுப்பார்ப்பது மொட்டைத்தலையன் தன்தலையைச் சந்திரனுடன் ஒப்பிடுவது போன்றது. எதற்கும் சரியான ஒற்றுமைவேண்டாம்?
எரிச்சலுடன் சிந்திப்பேன்.
இந்த உடம்பு என் பிறப்புடம்பு. அதாவது அப்பாவுக்கு புடலங்காய் உடம்பு. ஆகவே எனக்கும் அப்படித்தான் இருக்கும். ஆனால் செல்வராஜின் அப்பாவுக்கு உடம்பு அப்படியில்லையே. அவரும் சொத்திதானே? பிறகெப்படி?
மனம் ஆராய நான் இடம்கொடுக்க மாட்டேன். இடம்கொடுத்தால் இரவெல்லாம் தூக்கம்கெட்டுவிடும். ஆகவே என்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வேன்.
அவனுக்கு வெறும் மாட்டுடம்பு மட்டும்தான். மூளையே கிடையாது.



நமக்குத்தான் சுப்பர் மூளை. ஆகவே அவனைவிட நாம்தான் மேல். என்னை நானே ஆற்றிக்கொள்ள நல்ல ஐடியாவல்லவா? அத்தோடு திருப்திப்பட்டுக்கொள்வேன்.
அன்றைக்கு திங்கட்கிழமை.
வகுப்பு சற்று பயத்தினால் சலசலத்துக் கொண்டிருந்தது.
முதல்பாடம் கணக்குப்பாடம். வெள்ளிக்கிழமை தந்திருந்த கணக்குகளை இன்றைக்கு ஒப்படைக்கவேண்டும். செய்யாமல் வந்திருந்தாலோ... செம்மையாகக் கிடைக்கும். செல்வராஜ் என் காதில் குசுகுசுத்தான்.
"டேய் ரமேஷ்! எனக்கொரு உதவி செய்வியாடா?"
நான் கணக்கில் புலி.
ஜோசப் மாஸ்டர்தான் கணக்கு மாஸ்டர்.
செல்வராஜ் வீக். அவர் எடுத்த எடுப்பிலேயே கையை நீட்டடா! என்றுவிட்டு விளாசிவிடுவார். அவர் உருவத்தில் சொத்திதான் என்றாலும் இந்த பலசாலிகளுக் கெல்லாம் அவரென்றால் ஒரே கிலிதான். ஆகவே அவ்வப்போது கொப்பியடித்துக் கொள்ள என் கொப்பியை வலம்வர விடுவது வழக்கம். படிப்பில் எப்படியோ கொப்பியடிப்பதில் மட்டும் எக்ஸ்பிரஸ் வேகத்தில் இயங்குவார்கள் இவர்கள்.
எனவே தைரியமாக நான் கேட்டேன்
"ஏன் ஹோம்வொர்க் செய்யவில்லையா என் கொப்பிவேணுமா?"
"அதில்லையடா. நான் எல்லாக்கணக்கையும் செய்திட்டேன். இந்த லெட்டரை நீ...எனக்காக..."
எனக்குத் திக்கென்றிருந்தது.
அதெப்படி இவன் கணக்கெல்லாம் செய்திருப்பான்? அதுவும் சரக்குமுதல் கணக்கைச்செய்ய இவனால் எப்படி முடியும்? அதோடே ஏதோ போஸ்ட்மேன் வேலைக்கு அழைப்பு விடுக்கிறானே ஏன்?
அவனது முகம் சிவப்பதை அவதானித்தேன். குற்றவுணர்வு உந்தித் தள்ள அவன் மெதுவாக நடுங்கினான்.
"என்ன லெட்டர்? யாரிடம் கொடுக்கவேணும்?"
அவன் வாயில் விரல்வைத்து எச்சரித்தான். உரக்கப் பேசாதே என்று பொருள். ஆகவே அவன் என் காதருகில் என் தலையைச் சரித்தேன்.
"அந்த கௌதமிகிட்டே கொடுத்திடுவியாடா? ப்ளீஸ். எனக்கு உன்னைத்தவிர நம்பிக்கையான நண்பன் இல்லைடா."
அதை வாங்கினேன். ஒரு முழுக் கொப்பித் தாள். சின்னஞ்சிறு பொட்டலமாக மடிக்கப்பட்டு மினியுருவில் என் உள்ளங்கையில்.
ஆகா! ஓர் அரிய சந்தர்ப்பம். இனி நாமும் வனிதையர் பக்கம் வலம்வர வாய்ப்பு வந்திருக்கிறது. ஆனால் எங்கே எப்படி அவளிடம் கொடுப்பது?
அவனே சொன்னான்.
"வகுப்பு முடிய வெளி கேற்றுக்கருகில் இருக்கும் பலா மரத்தடிக்கு அவள் வருவாள். அப்போது கொடுத்துவிடு"
இவன் எப்படி இப்படி பிளான் பண்ணினான்?
கடிதத்தை என் பொக்கற்றுக்குள் திணித்துக்கொண்டேன். அவன் நன்றியுடன் சிரித்துக் கொண்டான்.

மதிய இடைவேளையின்போது ஒரு சீனி பணிசும் டீயும் ஒரு வாழைப் பழமுமாக ஒரு மினி பார்ட்டியே எனக்காக நடந்தது.
இடையில் ஒருதடவை பாத்ரூம் போகிறசாக்கில் போய் நுழைந்துகொண்டு அவனெழுதிய கடிதத்தைப் பிரித்துப் பார்த்துவிட பெரிய ஆவல்
மனசாட்சி குத்தியது பயமாகவும் இருந்தது.
சில குற்றங்களைச் செய்ய நேரிடும்போது மனசாட்சியை ஒதுக்கி வைத்து விட்டுத்தான் செய்யவேண்டும். அப்போதுதான் உண்மை தெரியும் இவ்வாறு என் பிழைக்கு நானே சமாதானம் வழங்கிக்கொண்டேன்.
பாத்ரூமிற்குள் புகுந்துகொண்டு கடிதத்தைப் பிரித்தேன்.
வாசிக்க வாசிக்க கிளுகிளுத்தது.
ஒரே 'எடல்ட்ஸ் ஒன்லி' வசனங்கள்.
ஆனால் கடைசியில்... எனக்காகக் கணக்குகளைச் செய்து தந்ததற்கு நன்றி என்று நல்ல தமிழில் முடித்திருந்தான்.
என்னையறியாமலே நான் சத்தமாகச் சிரித்துக்கொண்டேன்.
மொக்குப் பயலுக்குக் கணக்குப்பாடம் செய்துகொடுக்க ஒரு காதலியா!
ஹாஹாஹா என்று சிரித்துக்கொண்டே திரும்பிவந்தேன்.
செல்வராஜின் கண்கள் சந்தேகத்தோடே என்னை வட்டமிடுவது தெரிந்தது. உடம்பு இலேசாக நடுங்....
இருந்தாலும் காட்டிக் கொள்ள முடியுமா என்ன?

''ஏனடா சிரித்துக் கொண்டிருக்கிறாய்?''
அவனே கேட்டுவிட்டான். நான் ரெடிமேடாக பதில் வைத்திருந்தேன்.
''இல்லே இந்தக்கடிதத்துக்குப் பின் தர்ஷினியும் அவளும் சண்டை படிக்காமல் இருந்தால் சரிதான்''
அவன் சிரித்தான். நானும் எனது தற்காப்பு நடவடிக்கையை மேலும் தொடராமல் வைத்துக்கொண்டேன்.

பலாமரத்தடி.
நான் நின்று கொண்டிருந்தேன். பெரும்படையாக வெளியேறத் துவங்கிய மாணவ, மாணவியர் பட்டாளம் படிப்படியாக ஒன்றிரண்டாக மெலிந்துகொண்டே வந்தது.

செல்வராஜைக் காணவேயில்லை.
முழு வட்டாரமும் அமைதியான பிறகு ஓரிருவராக ஆசிரியர்கள் வரத்துவங்க எனக்குப் பதட்டமாகவிருந்தது.
தற்செயலாக எவராவது ஏன் தனியாக நிற்கிறாய் என்று கேட்டுவிட்டால்?

ரெடிமேட் பதிலுக்காக என் மூளை பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டிருந்தது.
அப்பப்பா! எவனுக்காகவோ நான் குற்றவாளிபோல இப்படி நடுநடுங்க வேண்டியிருக்கிறதே என்று என்னையே சபித்துக்....



''நீங்கதானே ரமேஷ்..?''மென்மையான இனிமையான ஆனால் அழுத்தமான ஒரு மென்குரல்.
சடக்கென்று திரும்பினேன். அவள்தான்.
மிக நிதானமாக என்னருகில் வந்து நின்றவள், என்னை நேருக்கு நேராகப் பார்த்துச் சிரித்தாள். எனக்கு...எனக்கு.....
'இவள் செல்வராஜின் பிரண்ட் என்றால் என்னைப் பார்த்து ஏன் இப்படிச்சிரிக்கிறாள்? இனந்தெரியாத உணர்ச்சிகளின் உந்துதல்கள். என் நெஞ்சு படபடத்தது.
''அவர் தந்தாரா?''
''ஆமாம். இதோ...'' நான் எடுக்கப்போகிறபோது
''கொஞ்சம் பொறுங்கள் இப்போதுவேண்டாம்''
என்கண்கள் பரபரத்தன.
அவள் குரல் குசுகுசுத்தது.
''அந்தச் சனியன் மீனா வந்துகொண்டிருக்கிறாள். அவள் போகட்டும். பிறகு தாருங்கள்''
மீனாவா? யாரது?
எனக்கு நானே கேட்டுக்கொண்டு அவள் திரும்பிய திசையைப் பார்த்தேன்.
மிகவும் நிதானமாக எங்களைத் தாண்டிக்கொண்டு அவள் போய்க்கொண்டிருந்தாள். அவளது கண்களில் ஒருவிதமான...
என்னால் விளக்கமுடியாத சந்தேகம் கலந்து ஒளிர்ந்தது.
தாண்டிச்சென்றவள் கேற்றுக்கு வெளியேசென்றதும் திரும்பி எங்களைப் பார்த்தபோது நான் செல்வராஜின் கடிதத்தை நடுங்கும் விரல்களுடன் கௌதமியிடம் கொடுத்துக் கொண்டிருந்தேன்.
அவள் மறைந்துவிட்டாள். இவள்சொன்னாள்.
''அவள் பெரிய ஒழுக்கம். கலாச்சாரம் என்று சின்ன வட்டத்துக்குள் சுத்துகிற ஒரு கேஸ்...அது சரி..நீங்கள் நல்லா கணக்கு செய்வீர்களாமே! அவர்தான் சொன்னார்.''
''நீங்களும்தானே''
''அதெப்படி உங்களுக்குத் தெரியும்?'
''அவன் ஒரு கொப்பி மெஷின். வழமையாக என் கொப்பியைப்பார்த்து அடிப்பவன். இன்றைக்கு ஹோம்வேர்க் செய்துகொண்டு வந்திருந்தானே! அது கின்னஸ் ரெகார்ட் அல்லவா!''
அவள் 'க்ளுக்' கென்று சிரித்தபோது எனக்குப் புல்லரித்தது
புளகாங்கிதத்தால்.

தூரத்தில் சில வெள்ளை வேஷ்டிகள்....
அசைந்து அசைந்து...
ஓகோ! ஆசிரியர்கள் சிலர் வந்துகொண்டிருக்கிறார்கள். இனியும் நின்றால் ஆபத்து ஓடிவிடவேண்டும்.
அவளே முந்தினாள்
''நாளைக்கு இந்த நேரம் வாங்கோ... பதில் எழுதிக்கொண்டு வருவேன் சரியா?''

"ம்" என்றவன் களவாய்க் கள்ளருந்திவிட்டுப் பனைமரத்திலிருந்து இறங்கிய கள்ளனைப்போல விடுவிடென்று நடந்தேன். சிறிது தாமதித்த பின் அவள் என்னைத் தொடர்வது தெரிந்தது. வேகமாக வெளியேறிய நான், மடமடவென்று நடையைக் கட்டினேன். உடல் வியர்த்து பாதியுடை நனைந்துவிட்டிருந்தது.
செல்வராஜ்?
அவனைக் காணவேயில்லை. புத்திசாலி முன்னெச்சரிக்கை மிக்கவன்.
நான் நேராக வீட்டுக்குப் போய்விட்டேன்.அதன்பிறகு சில காலமாக...
ஒவ்வொரு மறுதினமும் மரத்தடியில் கடிதப்பரிமாற்றம் நடைபெறும். நான் போஸ்ட்மேனாக.
நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன.
எனக்குப் புதிய பழக்கம் பழகிப் போகத்தொடங்கிவிட்டது.

ஒருநாள்...
வழமைபோலவே மரத்தடியில் நின்று காத்துக்கொண்டிருந்தேன்.
அப்போது...
கௌதமிக்குப் பதிலாக மீனா வந்துகொண்டிருந்தாள்
கௌதமிக்குச் சளைத்தவளல்ல. ஒருபடி மேலாகவே அழகு கொழிக்க அவள் இருந்தாள். சலனம்... சபலம்.. முதலில் மனம் படபடத்தது.
என்றாலும் படுவேகமாக மூளை இயங்கத் துவங்கியது.
செல்வராஜின் முறையிலே கௌதமியும் நடக்கத் துவங்கியிருக்கிறாள் போலும்.
இருவரும் பரஸ்பரம் தீட்டியிருக்கிறார்கள். இடையில் நான். என்முன் மீனா.
இவள்மீது...வலை போட்டால்?
பெரிய ஆர்வமும் கிளுகிளுப்பும் என்னை ஆட்டிப் படைத்தன.
நமக்கென்று ஒரு பறவை வருகின்றது வரவேற்போம்.
வலைக்குள் வீழ்த்துவோம் என்று மனம் உற்சாகப்படுத்தியது.
First impression is the best impression என்பார்களே அதை நடைமுறையில் நமக்காக நாம் ஆக்கிக் காட்டுவதென்றால் நமது அறிவின்மேன்மையை இவள் வாயைத் திறக்கு முன் நாமே சொல்லி மலைப்பில் அயர வைத்துவிடவேண்டியது முக்கியம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்று எனது மேதைமையைக் காண்பிக்க என் வாயைப்பிளந்தேன்.
"இன்றைக்கு கௌதமி உங்களிடம் கடிதத்தைத் தந்துவிட்டாளா?நாளையிலிருந்து நீங்கள்தான் கொண்டு வருவீர்களா? பலே..."
அவள் சொன்ன பதில்?
ஆயிரம் வால்ட் மின்சாரக் கம்பியில் ஈரக்கையை வைத்துவிட்டு அதிர்ச்சியில் என்னைத் தூக்கிவாரிப் போட்டது.
"அந்தமாதிரி நாய்வேலை செய்யும் பழக்கம் எனக்கில்லை"
நான் நடுங்கத் துவங்கிவிட்டேன் ஏதொவொரு பொறிக்குள் சிக்கிவிட்ட அதிர்ச்சி.
அவளே பேசினாள்.
"இன்றைக்கு அவள் பள்ளிக்கு வரவில்லை. அதனால்தான் நான் உங்களை எச்சரிக்க வந்தேன்"



"ஏன் என்ன நடந்தது?"
மீனாவின் கண்களுக்குள் தீப்பற்றிக் கொண்டிருந்தது. சிவந்திருந்த விழிகளுடன் அவள் சொன்னாள்.
"ஒருவனுக்கு ஒருத்தி என்றுதான் நமது பண்பாடு. அவள் உங்களுடனும் தொடர்பு வைத்துக்கொண்டு அந்தச் செல்வராஜோடும் கும்மாளமடித்துக் கொண்டிருக்கிறாள். உங்களின் நடவடிக்கைகளைக் கவனித்த நான் உங்களைப்பற்றி விசாரித்ததில் நல்ல ஒழுக்கமுள்ள பையன் என்றுதான் எல்லாரும் சொல்கிறார்கள்.
நீங்கள் இப்படி பலாமரத்தடியில் போட்டுவரும் நாடகம் தெரியாதவரைக்கும் சரி. தெரியவந்தால்... அதனால்தான் எச்சரித்து வைக்க வந்தேன்... அவளோடு பழகுவது கவனம்..."
"வந்து...வந்து...நான்...அவளை"
"எல்லா உத்தமர்களும் அகபடும்வரைதான் உத்தமர்கள்...நீங்கள்மட்டும் விதிவிலக்கா என்ன... ஒழுக்கத்தைப் பெண்களிடம் எதிர்பார்க்கும் ஆண்களுக்கு அது நடைமுறையில் வராதவரைக்கும் சமுதாயம் உருப்படவே வாய்ப்பில்லை. நீங்களாவது மற்றவர்கள் உங்கள்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை உண்மையோடு காப்பாற்றப் பாருங்கள்.. உங்களை மற்றவர்கள் மதித்தால் அது உண்மையாகவிருக்கவேண்டும். அதற்கு முதலில் நீங்கள் உண்மையாக இருக்க வேண்டும். இது எனக்குத் தேவையற்ற விவகாரம்.ஆனால் நமது சமுதாயம் என்ற கண்ணோட்டத்தோடு யோசித்தேன். அப்போது இப்படிச் செய்வதுதான் சரி எனப் பட்டது. அதனால்தான் ரிஸ்க்தான் என்றாலும் பரவாயில்லை சொல்லிவைப்போம் என்று காத்திருந்து சொல்லிவிட்டுப் போகிறேன். குட்பை. நான்போகிறேன். இனியாவது மரியாதையாக வாழப்பாருங்கள்.
விடுவிடென்று அவள் நகர்ந்து கொண்டிருந்தாள்
கிடுகிடுவென்று நான் நடுங்கிக் கொண்டிருந்தேன்.
அவளுருவம் மறையும்வரைக்கும் நான் களிமண்சிலைபோல செயலற்று நின்று கொண்டிருந்தேன். விளக்கஞ் சொல்லி என் குற்றமின்மையை நிரூபிக்க நிறைய ஆசையும் ஆர்வமுமாக இருந்தாலும்...
அதற்காகக் காலமும் சம்பவங்களும் எல்லாநேரமும் அனுமதியளித்துக் கொண்டிருப்பதில்லை என்ற உண்மை எனக்குப் புலனாகிக்கொண்டிருந்தது.

□□□

(13ம்பக்கத்தொடர்ச்சி)
பிறர் கண்டு பிடித்து இழித்து உரைக்கும் முன்பே, அவைகளைக் கண்டுபிடித்து திருத்திக் கொள்ளவேண்டும்

இப்படித்தான் டார்வினும் செய்தார்.
உலக உற்பத்தி ஆராய்ச்சிபற்றி தான்எழுதிய நூல் அச்சாகிவெளிவந்தால் மதவாதிகளை ஒரு கலக்குக் கலக்கிவிடும் என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அதனால் தன்னுடைய ஆராய்ச்சியையும் ஆதாரங்களையும் திரும்பத் திரும்பப் பரிசீலனை செய்து பார்த்தார். பலவிதமான மாற்றுக் கருத்துக்களைக் கூறினார்.அறைகூவல் விடுத்தார்.
இதற்காக இவர் பதினைந்து ஆண்டுகள் செலவிட்டார். அதன் பின்புதான் நூலை வெளியிட்டார். புதிய சித்தாந்தத்தைக்கூறினார். உலகப் புகழ்பெற்றார்.

அரியாஸ்டோ புயலைப்பற்றி வர்ணனை என்ற நூலை தன் மனத்திற்கு ஏற்ற முறையில் எழுதுவதற்காக பதினாறு விதமாக எழுதிப்பார்த்து அப்புறம்தான் அதனை வெளியிட்டார்.

அனாலஜி என்ற நூலை பிஷப் பட்லர் எழுதி முடிக்க இருபது ஆண்டுகள் செலவிட்டு முழுவடிவம் பெறச்செய்தார். திருத்தி எழுதி தவறுகளை அகற்றினார்.

நியூட்டன் பூமிக்கு இழுக்கும் சக்தி இருக்கின்றது என்பதை தன்னுடைய இருபத்தோராவது வயதில் கண்டுபிடித்துவிட்டார்.
ஆனால் சிறு சந்தேகம் ஏற்பட்டதன் காரணமாக அதனைச் சரிசெய்வதுவரை பொறுத்திருந்து தன்னுடைய நாற்பத்தொன்பதாவது வயதில்தான் அந்தக் கண்டுபிடிப்பை வெளியிட்டார்.
நம்மைப்பற்றி நாமே அபிப்பிராயம் கொண்டு இருப்பதைவிட, நம்மைக்குறித்து பிறர்கொள்ளும் அபிப்பிராயம்தான் உண்மையானவை என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.
புகழுரையைக் கேட்டதும் பரவசம் அடைகிறோம். குறைகேட்டதும் கோபப்படுகிறோம்.
நாம் உணர்ச்சிவசப்படுகிறோமே தவிர அறிவு வசப்படுவதில்லை.
நம்மைக் குறைகூறினால் அதற்காக வருத்தப்படக்கூடாது.
நாமும் தவறுசெய்திருக்கலாம் என்று நினைத்து நம்மையே பரிசோதனை செய்துபார்த்துத் திருத்திக் கொள்ளவேண்டும்.
*குறை இருப்பின் குறைத்துவிடு குப்பைகள் இருப்பின் கூட்டித்தள்ளு* என்று அறிஞர் அண்ணா கூறியதை என்றும் நினைவில் வைத்துக்கொண்டு செயல்பட்டு வெற்றிபெறவேண்டும். **(நன்றி: மலேசியநண்பன்)**



# பூவரசும் நானும்.

95ம் ஆண்டுதான் அறிமுகமானது எனக்கு பூவரசு என்னும் இனிய தமிழ் ஏடு. அதை என் சகோதரர் வீட்டில் கண்டேன்.
அது அச்சுப் பிரதியாகவில்லை. கையெழுத்துப் பிரதியாக 91ம் ஆண்டு வெளியான முதல்ஏடு—
இதழ் ஒன்று!
அதிலிருந்த ஒரு வாசகம்—
'உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்!'
அதைக் கண்ணுற்றவுடனேயே பூரசின் பரந்தநோக்கைத் தெளிந்துகொண்டேன். மேலும் புரட்டிக்கொண்டு போனேன்.

அழகான தமிழ் எழுத்துடன் 'அச்சுப் பிரதியா?' என்று அதிசயிக்க வைத்தது. ஆக்கங்கள் அத்தனையும் தரம்.
பூவரசின்முதல் ஏட்டிலே அதன் ஆசிரியரின் பரந்த நோக்குள்ள கூரிய சமூக சிந்தனை தென்பட்டது. ஆக்கதாரரிலும்தான்.
வளரும் பயிரை முளையிலேயே தெரியும் என்பது பழமொழி. அது போன்று அதன் முளையிலேயே அதன் எதிர்காலத்தை கண்டுகொண்டேன்.
விற்பனை நோக்கில் எத்தனையோ மலர்கள் வெளிவருவது கண்டிருக்கிறேன். ஆனால்அவற்றில் இன்று எத்தனையோ வாசகர்களின் மதிப்பை இழந்து செயலற்றுக்கிடக்கும் நிலை.
புலம்பெயர் நாட்டில் தனக்கென உரியநிலையில் இளம் எழுத்தாளர்களை சமூகத்திற்கு நன்மையூட்டத்தக்க நல்ல சிந்தனையாளர்களை தட்டிக்கொடுத்து ஊக்கம் கொடுக்கும் சஞ்சிகை பூவரசு என்றால் மறுப்பதற்கில்லை.
மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருக்கிப் பாயும் என்பது போல் இரு திங்கள் ஏடானாலும் இடைவிடாத அதன்பணி எல்லா எழுத்தாளர்களையும் திருப்திப்படுத்த அறிவூட்டும் ஒரு ஆசானாக இன்று ஒன்பதாவது ஆண்டில் பணி செய்கின்றதென்றால் பூவரசிற்கு நிகர் பூவரசுதான்.
எனது கன்னி முயற்சிகள் பலவற்றிற்கு குரு பூவரசேதான். என் கற்பனைகளில் தோன்றிமறையும் கருக்கள்எத்தனையோ. நான் தாயகத்தில் இருக்கும்போது எத்தனையோ பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கு பல ஆக்கங்கள் அனுப்பியிருக்கின்றேன்.

என் மனதிற்கு நிறைவு தந்த ஆக்கங்கள் ஏன் அந்தப் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கு திருப்தி கொடுக்கவில்லையா?
ஒன்று இரண்டைவிட மற்றவைகள் குப்பைக் கூடையில்தான்.

ஆனால் பூவரசோ என் கன்னி முயற்சிகள் பலவற்றிற்கு களமமைத்துத் தந்துள்ளது.

பூவரசைவளம்படுத்தும் எத்தனையோ மூத்த எழுத்தாளர்கள் எங்கே நான் எங்கே? கடலில்போட்ட கல்லென்றே கூறலாம். இருந்தும் என் எழுத்துக்களை ஏற்றம் பெற வைக்கும் ஏணியாய் பூவரசு கருதி இடம் தருகிறது.

ஆசிரியர் இந்துமகேஷின் கற்பனைக்கு உயரிய சிந்தனைக்கு சமூக சீர்திருத்தக் கருவிற்கு சிறந்தமொழிநடைக்கு அவரின் ஆக்கங்கள் என்றும் பெயர் சொல்லுமளவிற்கு சான்று பகருகின்றன.

திண்ணிய நெஞ்சம் வேண்டும். தெளிந்த நல்லறிவுவேண்டும்.நல்லவை எண்ணல்வேண்டும்.எண்ணியதுமுடிதல் வேண்டும் என்ற போக்குடைய ஒருவர் ஆசிரியராய்க் கிடைத்தது பூவரசு ஆக்கதாரருக்கும் வாசகர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமே.

எழிலன், இராஜன் முருகவேல், வீ.ஆர்.வரதராஜா போன்ற முற்போக்கு வாதிகளது ஆக்கங்கள் அளப்பெரியது. அவர்கள்மட்டுமா இன்னும் எத்தனை எத்தனையோ எழுத்தாளர்கள் கலைஞர்கள். பூவரசு மடியில் தவழும் குழந்தைகள், நடுத்தரத்தினர், முதிர்ந்தவர்கள் என்று யாவர்க்கும் களம்கொடுக்கும் பூவரசு எட்டாண்டாய் மலர்ந்து நிழல்கொடுத்தது மணமுடன். இப்போது ஒன்பதாவது ஆண்டில்.

இதுவரைகாலமும் மலர்ந்தவற்றில் நான் முகர்ந்த பூவோ மூன்றாண்டு மலர்ந்தவைதான். அவை என் சிந்தனையைத்தட்டிவிட்டு என்னை முழுமை பெறவைக்க என் கற்பனையை ஊற்றாக்க மலர்ந்த இதழ்களாகவே அவற்றின் வரவை உணர்கிறேன்.

என்கடன் பணிசெய்து கிடப்பதே என்பதற்கிணங்க தன்பணியை நோக்கி முன்னேறி எட்டு ஆண்டுகளாக எத்தனையோ தமிழ் நெஞ்சங்களில் இடம்பிடித்த பூவரசு இன்னும் பல்லாண்டுகள்மலர்ந்து என்னைப்போன்ற இளம் எழுத்தாளர்களுக்கு ஏணிப் படிகளாய் அமைந்து தமிழ்வாழும் இடமெல்லாம் பூவரசு மலர வாழ்த்தி —

பூவரசை நன்றாக இந்துமகேஷ் படைத்தது தமிழ்வாழும் இடமெல்லாம் பணிசெய்யுமாறே என்பதற்கிணங்க, எம்பணிதொடர நாம் வாழத் தமிழ்வாழும் பூவரசு வாழ நம்சிந்தனை வளரும். எனவே பூவரசை வளர்க்க நாமெல்லாம் ஒன்றிணைவோம். பூவரசும் நாமுமாய்..

**அ.கணேசலிங்கம்.**
(பிறேமன்)



## பொங்கிவரும் அன்பிற்குப் போதாதோ ஒருத்தி?

பொங்கிவரும் அன்பிற்குப் போதாது
ஒருத்தியென்று ~கொஞ்சும்
கோபியர் அன்பையும் கொண்டவனே
கிருஷ்ணா கிருஷ்ணா
வண்டினங்கள் துளைபோட்ட
மூங்கில் மரக் குழலெடுத்து
நெஞ்சை அள்ளும் கானம்
நீ கொடுத்தால்
நந்தவனக் குன்றும் அசையாதோ
பெண்களிவர் தான் பின்தொடராரோ?

காலமெனும் பெருநதியின்
மூலமது நீயென்றால்
கோகுலத்துப் பெண்களிவர்
வற்றிவிடும் சிறுவாய்க்கால்
இவர் பற்றியுனைத் தொடராரோ~உன்
பாதம்பணிந்து வணங்காரோ?

துன்பம் வரும் வேளையிலே
துணிந்துவரும் தெய்வம் நீ
மந்தைவெளிக் காட்டினிலே
மறைந்து இருக்கலாமோ?
நந்தவனக் குன்றில்
கொஞ்சும் மதிவிளக்கில்
வஞ்சியவர் மடியில்
துஞ்சும் மலர் மன்னா
கன்றுமுதல் பசுவும் உனை
அந்திவரை காணாது
நொந்து மனம் வாடும்
விந்தை யுலகுனதே
வேதம் நீயல்லவா~நீ
மண்ணழைந்து தின்ற வாய்திறந்தால்
எண்ணிறந்த அண்டங்கள்~நீ
கண்ணயர்ந்து தூங்கிவிடால்
இந்த மண்ணுலகம் என்னாகும்~இந்த
மண்ணுலகம் என்னாகும்!!

**-ப.இராஜகாந்தன்**

**தமிழ்நாடு அரசு அண்மையில்**
**வெளியிட்டுள்ள**
**முருகன்மீதான**
**தமிழ் அர்ச்சனை இது.**

# முருகவேள் போற்றி

ஓம் அறுமுகச் சிவமே போற்றி
ஓம் அறுகுசூடிதன் இளையாய் போற்றி
ஓம் அழகினுக் கழகே போற்றி
ஓம் அருளினுக் கருளே போற்றி
ஓம் அலங்கார நாயக போற்றி
ஓம் அநுபூதி நாதனே போற்றி
ஓம் அன்பின் அண்ணா போற்றி
ஓம் ஆறுமுக அப்பா போற்றி
ஓம் இமையோர் இறைவா போற்றி
ஓம் இமயப் புகழோய் போற்றி

ஓம் இருளினை நீக்குவாய் போற்றி
ஓம் இருசுடர் ஆனாய் போற்றி
ஓம் ஈசனார் குருவே போற்றி
ஓம் ஈரேழ் உலகோய் போற்றி
ஓம் உமையருட் செல்வா போற்றி
ஓம் உயர்மறைப் பொருளே போற்றி
ஓம் எஃக வேலுடையாய் போற்றி

ஓம் எமபயம் நீக்குவாய் போற்றி
ஓம் எழில் அற்புதனே போற்றி
ஓம் ஏறுமயில் ஏறி போற்றி

ஓம் ஔவைக் கரசே போற்றி
ஓம் ஒப்பிலா இறைவா போற்றி
ஓம் ஓங்காரப் பொருளே போற்றி
ஓம் கந்தா முருகா போற்றி
ஓம் கடம்பா இடும்பா போற்றி
ஓம் கங்கையின் மைந்தா போற்றி
ஓம் கதிர்காமக் கந்தா போற்றி
ஓம் கவிமாலை அணிந்தாய் போற்றி
ஓம் கார்த்தி கேயனே போற்றி
ஓம் காவற் காரனே போற்றி

ஓம் காவடி விருப்பனே போற்றி
ஓம் குகனென நின்றாய் போற்றி
ஓம் கும்பமுனிக் குருவே போற்றி
ஓம் குமரகிரி வாசனே போற்றி
ஓம் குராவடி வேலனே போற்றி
ஓம் குறத்திக் கோவே போற்றி
ஓம் குறிஞ்சிக் கிழவா போற்றி
ஓம் குன்றம் எறிந்தோய் போற்றி
ஓம் குன்றுதோ றாடுவாய் போற்றி
ஓம் கூத்தன் மைந்தா போற்றி

ஓம் கூத்தாடு மயிலோய் போற்றி
ஓம் கொற்றவை குமரா போற்றி
ஓம் கொற்றதனி வேலோய் போற்றி
ஓம் கோலமயில் குமரா போற்றி
ஓம் கோரும்வரம் தருவாய் போற்றி
ஓம் சங்கப் புலவா போற்றி
ஓம் சரவண பவனே போற்றி
ஓம் சண்முகக் குமரா போற்றி
ஓம் சகல நலம் அருள்வாய் போற்றி
ஓம் சிவகுரு நாதா போற்றி

ஓம் சிவசுப்பிர மணியா போற்றி
ஓம் சீரலைவாய்த் தேவே போற்றி
ஓம் சூர் முதல் தடிந்தாய் போற்றி

## ஓம் கதிர்காமக் கந்தா போற்றி
## ஓம் கவிமாலை அணிந்தாய் போற்றி

ஓம் செஞ்சுடர் வேலா போற்றி
ஓம் செவ்வேள் பரமா போற்றி
ஓம் செந்தில் வாழ்வே போற்றி
ஓம் செந்தமிழ்ச் செல்வா போற்றி
ஓம் செங்கோட்டு வெற்பா போற்றி
ஓம் சேவற் கொடியோய் போற்றி
ஓம் சேந்தா முருகா போற்றி

ஓம் சைவக் கொழுந்தே போற்றி
ஓம் ஞானச் சுடரே போற்றி
ஓம் ஞானப் பழமே போற்றி
ஓம் தங்க வேலனே போற்றி
ஓம் தண்டாயுதபாணியே போற்றி
ஓம் தமிழ்மா மறையே போற்றி
ஓம் தமிழெனும் அழகே போற்றி
ஓம் திகழ்மணி மார்பா போற்றி
ஓம் திகழ்மயில் வாகனா போற்றி
ஓம் திருச்செந் தூரா போற்றி

ஓம் திருப்பரங் குன்றா போற்றி
ஓம் திருஆவி னன்குடியாய் போற்றி
ஓம் திருவே ரகக்குருவே போற்றி
ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி
ஓம் திருப்புகழ் விருப்பா போற்றி
ஓம் திருமால் மருகா போற்றி
ஓம் திருவருட் செல்வா போற்றி
ஓம் தீமையைத் தீர்ப்பாய் போற்றி
ஓம் துங்கக் கொடையோய் போற்றி
ஓம் தூ மறைக்கு ஆதீ போற்றி

ஓம் தெய்வானை கணவா போற்றி
ஓம் தேவர்தம் கோவே போற்றி
ஓம் நக்கீர நாயகா போற்றி
ஓம் நற்றமிழ் வேந்தே போற்றி
ஓம் பழநிமலை வாழ்வே போற்றி
ஓம் பழமுதிர்ச் சோலையாய் போற்றி
ஓம் பன்னிரு தோளாய் போற்றி
ஓம் பதினெண்கண் மலர்ந்தாய் போற்றி
ஓம் பிணிமுகம் ஏறுவாய் போற்றி
ஓம் பிணிக்குலம் ஓட்டுவாய் போற்றி

ஓம் பிரணவம் மொழிந்தாய் போற்றி
ஓம் பிரமனைக் குட்டினாய் போற்றி
ஓம் பிறவா நெறி அருள்வாய் போற்றி
ஓம் மலைமகள் மகனே போற்றி
ஓம் மன்றாடி மைந்தா போற்றி
ஓம் மாயோன் மருகா போற்றி
ஓம் முத்தமிழ் முருகா போற்றி
ஓம் முத்தைய வேளே போற்றி
ஓம் முருகெனும் அழகே போற்றி
ஓம் முருகாற்றுப் படையோய் போற்றி

ஓம் மூவர்க்கும் முதல்வா போற்றி
ஓம் வள்ளி நாயகனே போற்றி
ஓம் வழித்துணைக் குழகா போற்றி
ஓம் விழித்துணை அழகா போற்றி
ஓம் வெற்றிவேல் முருகா போற்றி
ஓம் வேடர்தம் மருதா போற்றி
ஓம் வையச் சுடரே போற்றி
ஓம் வைர வேல் வீரா போற்றி போற்றி

(5ம்பக்கத்தொடர்ச்சி)

எந்த ஒரு ஈழத்துப் படைப்பாளியும் சொல்லாத ஒரு பதில்~
நான் எழுதுவது சம்பாதிப்பதற்காக!
ஆனால்~
அப்படியொரு பதிலை எதிர்பார்த்து இங்கே சிலர் கேள்வி தொடுக்கிறார்கள்
ஏன் எழுதுகிறீர்கள்?
உங்களுக்கு வேறு வேலை இல்லையா? என்ற ஏளனம் அதில் தொனிக்கும்
அல்லது அல்லது உன்னை யார் எழுதச்சொன்னார்கள்? என்ற கிண்டல் தொனிக்கும்.
இது பல எழுத்தாளர்களுக்குக் கிட்டிய அனுபவம்.
இதற்கு மாற்று என்ன?
இந்தக் கேள்வி கேட்பவர்களுக்கு என்ன பதில் சொல்வது?
ஒரு சிறு புன்னகையோடு ஒதுங்கிப் போய்விடவேண்டியதுதான்.

□

எழுத்தாளர்களிலிருந்து சஞ்சிகை ஆசிரியர்களிடம் வருவோம்.
சஞ்சிகைகளை ஏன் வெளியிடுகிறார்கள்? என்ற கேள்வியோடு.

சிற்றிதழ்ச் செய்தி என்னும் சிற்றிதழை வெளியிட்டுவரும்
திரு.பொள்ளாச்சி நசன் அவர்கள் தனது சஞ்சிகையில் எழுதிய கட்டுரையில்
இப்படி எழுதினார்~

ஒவ்வொரு இதழாளரும் பல்வேறு பிரச்சனைகளுக்கிடையிலும் இழப்புகளுக்கிடையிலும்
இதழை வெளியிட்டு வருகின்றனர்.
இவ்வாறு இழப்புகளுக்கிடையிலும் இதழை வெளியிடுவது எதற்காக?
தன்னை வெளிப்படுத்தவா? ஏதாவது ஒன்றைப் பெறவா?
தொடங்கும்போது உயரிய கற்பனைகளோடு தொடங்கி
விரைவில் வற்றிப்போய் சுருங்கிப்போவது எதைக்காட்டுகிறது?
இதழாளர் என்பவர் யார்? எப்படி இயங்கவேண்டும்?
இதழாளர்கள் தங்களை உயர்த்திக்கொள்ளவேண்டும்
கருத்துச் செறிவேற்றிக்கொள்ளவேண்டும். நிறைய நட்பாகப் படிக்கவேண்டும்.
உள் வாங்கவேண்டும். குறைந்தபட்சம் தரமான தோழமை இதழாளரின் இதழையாவது
உள்வாங்கிப் படிக்கவேண்டும்.
இது வளரும்~ வளர நினைக்கும் இதழாளர் பின்பற்றவேண்டிய செயல்..

~இவரது கருத்தில் நானும் உடன்படுகிறேன்.
சஞ்சிகை நடத்துவது ஒரு பெரிய காரியமா என்ன? கணணியும் காசும் இருந்தால் நானும் ஒரு சஞ்சிகை ஆசிரியன்தான் என்று சொல்லிக் கொள்பவர்கள் தயவுசெய்து பொள்ளாச்சி நசனின் கருத்துக்களையும் கவனத்தில் கொள்ளுங்கள்.



# உருவங்களும்

**-விஜயா அமலேந்திரன்.**

எழுத்துக்கள் மட்டுமே சேர்ந்து நின்றால்
எழிலாக வசனங்கள் உருவம் ஆகும்
கருத்துக்கள் அவையோடே கலந்துகொண்டால்
படைப்பதன் அடிப்படை உருவம் ஆகும்
கருத்துக்கள் உண்மையைச் சுமந்துநின்றால்
படைப்புக்கள் உயிர்மைகொள் உருவம் ஆகும்.
உயிர்மைகொள் உருவமாய்ப் படைப்பு ஆனால்
படிப்பவர் மனமவ்வண் உருவம் ஆகும்
படிப்பவர் மனமவ்வண் உருவம் கொண்டால்
சிந்தையில் புது எண்ணம் உருவம் ஆகும்
சிந்தையில் புது எண்ணம் உருவம்கொண்டால்
பொய்யெதிர் உருவமாய் எண்ணம் மாறும்
பொய்யெதிர் உருவமாய் எண்ணம் ஆனால்
உண்மையில் லாதவர் உருவம் ஓடும்
உண்மையில் லாதவர் உருவம் இன்றேல்
உண்மையை நம்பும்நல் சமூகம் ஆகும்.

நீதிக்கு உருவமே இல்லையென்று
நீதியில் லாமலே நடந்துகொண்டு
நீதியைப் பற்றியே நிதமும் ஓதும்
நீதியற் றோரைநாம் உணரவேண்டும்
வேலியே பயிர்மேயும் பாதகந்தான்
தொண்டர்பேர் கொள்வரால் நடக்குமென்றால்
வேலியைப் பிரித்தேனும் பயிரைக்காத்தல்
உங்களின் கடனாக இருத்தல் வேண்டும்
வாயிலே பொய்கொண்டே சேவை செய்வான்
வானுயர் புகழ்பெற்று நிமிர்ந்துநின்றும்
கோயில்கொள் சிலையாக உருவம்கொண்டும்
பயனென்ன வெறுங்கல்லே என்று கண்டால்
சேவையில் போலிகள் பேதம்கண்டு
சரிவழி கண்டுநாம் நடந்துகொள்வோம்
பார்வையில் பெரியராய்ச் சிறியராடும்
பொய்யுருக் கண்டு நாம் விலகி நிற்போம்.

# நினைவுத் தெறிப்புகள்

**-நம்பிக்கை எதிர்காலத்திற்கு ஒளிதரும்**
**ஞாபகம் இறந்தகாலத்திற்கு முலாம்பூசும்!-**

**அத்தியாயம் 2.**

"தமிழீழத்தின் மேலாக விமானம் பறந்துகொண்டிருக்கின்றது!"
என்ற காட்சி அறிவிப்பை எப்போது என் கண்கள் காணப் போகின்றன?
இதயத்தின் ஓரம் ஆசையொன்று எட்டிப் பார்த்தது.
விரைவில் விரைவில் என்று மனசாட்சி பதில் தந்துகொண்டிருக்கும்போது தான் அந்தக்குரல்...!
எங்கேயோ எப்போதோ கேட்ட குரல்.
ஆனால் நடுநிசித் தூக்கக்கலக்கத்தில் யாரென ஊகிக்க முடியவில்லை.
"வணக்கம் அண்ணை!"
— குரல் அண்மித்துவிட்டது.
"வணக்கம்... வணக்கம்!"
வெள்ளையர்களும் இந்திக்காரரும் அதிகமாக இருந்த அந்த விமானத்தில் தமிழ்க்குரல். சந்தோஷமாக இருந்தது. நிமிர்ந்துபார்த்தேன்.
அதே ஆஜானுபாகுவான தோற்றம். புன்னகை தவழும் முகம்.
கைதந்து கொண்டே
"என்ன கனகாலத்துக்குப் பிறகு...சுகமாக இருக்கிறியளே? என்மகனும் மனிசியும் முன்னுக்கு இருக்கினம் சொல்லிப் போட்டு வாறன்!"
வேகமாய் போனான்.
நான் அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன்.
இருபது வருடங்கள்.
ஆனால் அத்தனையும் நேற்று நடந்ததுபோல் இருந்தது.
விமானத்தின் வேகத்தைவிட மனம்வேகம்கொண்டதுதானே
சிந்தனைத்திரையில் பழைய பசுமையான நினைவுகள்.

~மணிபல்லவன்



மறக்க முடியாத மறக்கக்கூடாத நினைவுகள்.
விமானத்தில் சந்திக்கும் வாய்ப்பு. எதிர்பாராதது.
ஆம் புஷ்பன்தான்.
பரஸ்பரம் சுகம்விசாரிப்பு.
இருபது ஆண்டுகளுக்குப் பின் ஒரு நண்பனைச் சந்திக்கும் நேரம்.
வார்த்தைகள் நத்தைவேகத்தைத் தாண்டவில்லை.
ஆனால்...
இன்றைக்கு இருபது வருடங்களைப் பின்நோக்கி என் சிந்தனைகள் நகர்ந்தன.
இனவெறி பிடித்த சிங்களதேசம் தமிழர்களைக் கொஞ்சம் கொஞ்சமாக மேலுலகத்திற்கும், தப்பியவர்களை ஐரோப்பா அமெரிக்க அவுஸ்திரேலியா என கூறுபோட்டு அனுப்பிக்கொண்டிருந்த எழுபத்தொன்பதுகளில் (ஆண்டு) ஏஜென்சிக்காரர்களால் உலகின் பலநாடுகளிலும் அகதி எனும் விதையாக தமிழர்கள் விழுந்துகொண்டிருந்த காலம்.
சில விதைகள் கல்லிலும், சில மண்ணிலும், சில ஆறுகளிலும் விழுந்து வாழத் துடித்துக்கொண்டிருந்த காலம்.
பண்ணைக் கடலோரம் இளைஞர்கள் ஜே.ஆரின் கொலைகாரக் கும்பலினால் கசக்கி எறியப்பட்ட காலம். இளைஞர்கள் பலர் சுதந்திர தாகம் கொண்டு தமக்குள்ளே கூடுகட்டி வளம்காணத் துடித்தகாலம்.
பிணம்தின்னி இராணுவப் போலீஸ் தேடலில் அகபபடாது அக்கரைப் பச்சைகளை அறுவடை செய்யவென பல இளைஞர்கள் வெளிநாடுகளுக்குப் படையெடுத்த காலம்.
சீதனப் பூதத்தால் பலியாகிப்போன தமிழ்ச்சமுதாயம் தாம்பெற்ற பிள்ளைகளை அதற்குப் பலியிட திசைதோறும் அனுப்பிக்கொண்டிருந்த காலம்.
இக்காலத்தில் ஓர்நாள்தான் நானும் பலரில் ஒருவனாக விதிவழி என தனிவழி போய் தப்பித்தவறி ஜேர்மனியில் பத்திரமாய்க் கால்பதித்த காலம்.
இன்று தமிழர்கள் உலகெங்கும் விதைக்கப்படவில்லை வதைக்கப்படும் காலமாகிவிட்டது.
இருபது வருடங்களுக்கு முன்னால் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே தமிழர்கள் ஜெர்மனியில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.
புதிய காய்கள் வர வர பழைய காய்களாகிப் பழுத்து மாறிப்போன சிலர் திரும்பியே பார்க்கமாட்டார்கள். மொழி தெரியாது செய்வதறியாது துடித்து நிற்கும் இளைஞர்களை தவிச்ச முயல் அடிப்பதுபோல் ஒருகூட்டம் திரியும்.
இக்கூட்டத்திலிருந்து காப்பாற்றி கரைசேர்க்கும் ஒருசிலர் தெய்வம்போலத் தெரிவர் திக்கற்ற புதிய காய்களுக்கு.
அந்த வகையில்தான் அந்தக் குரலுக்குச் சொந்தக்காரன் இவ்வளவு நீண்ட விளக்கத்தை எடுத்துக்கொண்டான்
அவன்தான் புஷ்பன்.

புதிய காய்களுக்கு ஒரு பழவிருட்சமாகவே தெரிந்தான்...ஓடியோடி உதவிகள் செய்தான்... வெள்ளைகள் முறைத்தால் ஏன் எதற்காக என்று புரிய சோக்கிரட்டீசாகவே மாறிவிடுவான்.
அந்தக் குரலுக்குரியவன்தான் அன்று வானூர்தியில் வணக்கம் சொன்னான்.
ஒருபொழுதும் துன்பமாக மாறாத பொருள் ஒன்று உண்டென்றால் அது நாம் செய்யும் நற்காரியங்களல்லவா?
உதவிபெற்றவர்கள் மறப்பதும் மறைவதும் மலிந்துவிட்ட இக்காலத்தில் இவனிடம் ஒரு உதவியும் பெறாமலே அவன் பிறருக்குச்செய்யும் உதவிகளைக் கண்டு அவனோடு பழகி நண்பனானேன்.
அவனின் குணமும் என்னோடு ஒத்திருந்தது என உணர்ந்திருந்தேன்.
இன்று நிலைமை தலைகீழ்.
முகவர்கள் பலர் யமதூதர்களாகவே மாறிவிட்டார்கள். பலர் காமாந்த காரர்களாகிவிட்டனர். இவர்களிடம் தம் உயிர்களைப் பலிகொடுத்தும் உடைமைகளைப் பறிகொடுத்தும் தப்புவோர் பூனையிடம் தப்பிய எலி, பொறியில் சிக்கிய கதையாக பல நாடுகளிலும் சட்டம் என்னும் கயிற்றால் கட்டப்பட்டு அங்கும் இங்கும் இழுக்கப்படுகின்றார்கள்.
என்ன பலமான யோசினை?
அவன் குரல் மீண்டும் என்னை சுய நினைவுக்குக் கொண்டு வந்தது.
விமானம் காற்றலையில் லாவகமாகப் பறந்துகொண்டிருந்தது.
கடைக்குட்டியின் கோழித்தூக்கம் கலையக்கலைய அம்மாவைக் கூப்பிடும்.
"என்ன அண்ணை... நீங்கள் இலங்கைக்குப் போனது தெரியும்..பிறகு வந்து எங்கேயோ இருப்பதாகவும் அறிந்தேன்... சந்திக்கத்தான் முடியவில்லை.
ஆம் புஷ்பன். சொதியோடை சாப்பிட்டாலும் சொந்தங்களோடை வாழுவம் எண்டுதான் வெளிநாட்டுக்குக் கும்பிடு போட்டுட்டு போனன். அங்கையும் பாழ்படுவான்கள் விட்டான்களே? எண்பத்தி மூன்றிலையே கொழும்பிலையே சிங்களவன் வைத்தியம் பண்ணித் திருப்பியே அனுப்பிவிட்டான்.
யமதூதர்களை பாசக்கயிற்றோடு சந்தித்துவிட்டுத்தான் தலைதெறிக்க ஓடிவந்திட்டன்.
"நீர் நின்று கொண்டிருக்கிறீர்!" — நான்.
"பரவாயில்லை அண்ணை இவ்வளவுநேரமும் இருந்ததுதானே? நிற்பதும் சுகமாத்தான் இருக்கு!" என்றான்.
"சரி புஷ்பன்... துணைவியார் இலங்கைதானே..."
சரளமாக டொச்மொழி தெரிந்ததினாலும் பல காலமாக ஜெர்மனியர்களோடு தொடர்பு இருந்ததாலும் அந்தக் கேள்வியை கேட்கவேண்டிவந்தது.
"ஓமோம் இலங்கைதான்... எங்கடை ஊர்ப்பிள்ளைதானண்ணை."
"நல்லதப்பா!"
ஒரு தமிழ்ப் பெண் வாழ்ந்ததை எண்ணி சந்தோஷப்பட்டேன்.
அவ்வளவுதான்.
இப்போது நடக்கும் சில சம்பவங்கள் மனத்திரையில் மின்னிச்சென்றது.



ஆண்பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு அவர்களின் உழைப்பை உறிஞ்சிக்கொண்டு (கடமை?) பெண்சகோதரங்களும் கரைசேர்ந்தாற்பிறகும் அவர்களின் வாழ்க்கையைப்பற்றிச் சிந்திக்காத எத்தனையோ ஆயிரம் பெற்றோர்களை நாம் பலரும் கண்டிருக்கிறோம்.
கொழும்புக்கு வந்து ஹலோ என்று சொல்லிக் கிலோக்கணக்கில பணம் பிடுங்குகிற சில பெற்றோர்களும் உறவினர்களும் இருப்பதை யாரும் மறுக்க முடியாதல்லவா?

இப்போது அத்தகைய பெற்றோர்களுக்கு பிள்ளைகள் நல்லவேலை கொடுத்துக் கொண்டிருக்கிறார்களாம்.
'அப்பா அம்மா இங்க எனக்கு விசாப்பிரச்சினை. நான் ஒரு ஜேர்மன்காரியை சும்மா விசாவுக்காகப் பதியப்போறன். எனக்கு உடனடியாக ஒரு 'அன்மரீட் சேட்டிபிகட்' எடுத்து அனுப்புங்கோ!' என்று சொல்ல தாய்தகப்பன் கொழும்பெல்லாம் அலையாய் அலையுதுகள். பாவம் அதுகள்.
இளைஞர்களைப் பொறுத்தவரை சும்மா என்பதெல்லாம் சும்மாதான்.
அவர்களும் முப்பதையும் தாண்டி தலையிலுள்ளதையும் இழந்து கொண்டிருப்பவர்களுக்கு பெற்றோர்கள் வழிகாட்டினால்தானே?
என் வழி தனிவழி என்று துணிந்துவிட்டார்கள். இதனால் இழப்பு எமது இனத்துக்குத்தான்.
"என்னப்பா? கூப்பிட்டனீங்களே?"
நித்திரை குழம்பும் போதெல்லாம் என் மனைவியானவள் தொடுக்கும் கேள்வி திருப்பியவள் புஷ்பனைக் கண்டதும் "வணக்கம் அண்ணை" என்று சொல்லிக்கொண்டே என்னைப் பார்த்தாள்.
சுருக்கமாக அறிமுகப்படுத்திவிட்டதும் மீண்டும் நித்திராதேவியின் ஆளுகைக்கு உட்பட்டுவிட்டாள்.
"சரியண்ணை இன்னும் ஒருமணித்தியாலத்தில் பம்பாய் வந்திடும். பிறகு சந்திப்போம்!" என்று கூறிக்கொண்டே விடைபெற்றான் புஷ்பன்.
விமானத்தில் பொருத்தியிருந்த தொலைக்காட்சிப் பெட்டியிலும் அந்தத்தகவல் விழுந்துகொண்டிருந்தது.
பணிப்பெண்கள் தண்ணீர் வேண்டுமா? யூஸ் வேண்டுமா என ஒவ்வொருவராகக் கேட்டுக்கொண்டே வந்தார்கள்.
சும்மா சொல்லக்கூடாது.
ஆசியர்கள் விருந்தோம்பலில் சளைத்தவர்கள் இல்லையென்பதை விமானத்துக்குள்ளேயே காட்டிக்கொண்டிருந்தார்கள்.
தொண்ணூறு விழுக்காடு வெள்ளையர்களாலேயே நிரம்பியிருந்த அந்த விமானம் இன்னும் சில நிமிடங்களில் தரையைத்தொடும் என்ற அறிவிப்பு கேட்டதும் பயணிகள் கண்களைக் கசக்கியும் சோம்பல்முறித்தும் தமது உடமைகளை ஒருகணம் நோட்டம் விட்டபடியும் நித்திரைக்கு குட்பை சொல்லிக்கொண்டிருந்தார்கள்.
யன்னலூடே எட்டிப்பார்த்தேன்.

ஆகா! என்ன அழகு.!

பம்பாயை அண்டியுள்ள நகரங்களின் வீதியோரத்து மின்விளக்குகள் அழுதுவடிந்துகொண்டிருந்தது துல்லியமாகத் தெரிந்தன.

பம்பாய் விமானநிலையத்தில் தரையிறங்குவதற்காக ஆயத்தம் செய்தபோது... பணிப்பெண்கள் இடுப்புப் பட்டிகளை அணியுமாறு சொல்லிக்கொண்டிருக்க ஒரு பணிப்பெண் எங்கள் கடைக்குட்டிக்கு பட்டியை மாட்டுவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டிருந்தாள்.

எனக்கு ஒருபுறம் சிரிப்பு.

ஜேர்மனியில் காரில்போகும்போது கூட பாதுகாப்புப் பெல்ரை போடுவதில் நான் ஒருநாளும் மகளை வென்றதில்லை.

'போலீஸ் பிடிக்கும்.. பெல்ரைப்போடும்... இல்லாவிட்டால் காசுகட்டவேண்டும்!' என்று முறைத்தால் 'பாங்கில கொடுத்துக் கட்டிவிடுங்கப்பா!' என்று சர்வ சாதாரணமாகச் சொல்லுவாள்.

பாங்க்கோடு நாங்க் படுகிறபாடு இந்தப்பிள்ளைகளுக்கு எங்க விளங்கப் போகுது?

"என்னப்பா தானாகவே சிரிக்கிறியள்?" என்ற துணைவியை

"விமானம் பத்திரமாகத்தரையைத் தொடப்போகுதல்லவா அதை நினைச்சேன் சிரிச்சேன்!" என்று கதையை மாற்றிவிட்ட என்கைகள் உடைமைகளை நோக்கி நீண்டுகாண்டிருந்தன.

ஒன்பது மணித்தியாலங்கள் பயணித்த எங்களுக்கு விமான நிலையத்தில் ஓய்வு கிடைக்கும் என்ற நமபிக்கை தவிடுபொடியாகிக் கொண்டிருந்ததை அறியாமலேயே விமானத்தை பத்திரமாகத் தரையிறக்கிய விமானிகளுக்கு கரகோஷம் செய்துவிட்டு விமான நிலையத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம்.

ஆனால்...அங்கே...?

**(பயணம் தொடரும்)**

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
பொள்ளாச்சி நசன்
9/4/09

**பூவரசு**

**அடுத்த ஆண்டு (2000 தைத்திங்களில்) தனது ஒன்பதாவது ஆண்டுப் பணியை நிறைத்து பத்தாவது ஆண்டுக்கான கலை இலக்கியப் பணியில் காலடி பதிக்கிறது.**

**அடுத்த ஆண்டு வெளிவரும் அத்தனை இதழ்களும் சிறப்பிதழ்களாக வெளிவருகின்றன.**

**எழுதுகிறார்கள்!**

# பூவரசு 2000

ஒவ்வொரு
சிறப்பிதழிலும்
ஒவ்வொரு
**நெடுங்கதை**

**பூவரசு
இனிய தமிழ் ஏட்டின்
முன்னணி எழுத்தாளர்கள்
எழுதுகிறார்கள்!**

முகப்பு ஓவியம்:
ஓவியக்கலைஞோன்.

# பூவரசு

# 2000

அடுத்த (2000)தைத்திங்களில்
பூவரசு தனது பத்தாவது ஆண்டுக்கான
கலை இலக்கியப் பணியில் கால்பதிக்கிறது.

பூவரசு முதல் இதழிலிருந்து
இந்த ஆண்டு இறுதிவரை
பூவரசு சந்தித்த–சந்திக்கும்– படைப்பாளர்களை,
வாசகர்களை, கலைஞர்களை
அன்புடன் நினைவுகூர்வதோடு
அதன் வளர்ச்சியில் அக்கறைகொண்டு
உழைத்தவர்களையும்
நன்றியுடன் நினைவு கூர்கிறது.

அடுத்த ஆண்டு வெளிவரும் அத்தனை இதழ்களும்
சிறப்பிதழ்களாக மலர்கின்றன.

உங்கள் படைப்புக்களும்
பூவரசு 2000
சிறப்பிதழ்களில்
வெளிவர வேண்டுமெனில்
உடன்அனுப்பி உதவுங்கள்.